# கல்வெட்டு

சிறப்பிதழ்

KALVETTU

திருவள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசித் திங்கள்



மகாவீரர் சிற்பம் - பனைப்பாடி
(விழுப்புரம் மாவட்டம்)

கல்வெட்டு காலாண்டிதழ் 75 (அக்டோபர் 2008)

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

முனைவர் க.அருள்மொழி, இ.ஆ.ப
ஆணையர்

தொல்லியல் துறை
தமிழ்வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை-8
-11-2008

# பதிப்புரை

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை வரலாற்று உலகிற்குத் தேவையான அனைத்து அடிப்படைத் தரவுகளையும் அளிக்கும் வகையில் கள ஆய்வு, கல்வெட்டாய்வு மற்றும் படியெடுத்தல், கற்சிற்பங்கள், ஓலைச்சுவடிகள் சேகரித்தல், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு செய்தல், பழஞ்சின்னங்களைப் பாதுகாத்தல், செப்புத்திருமேனிகள், கற்சிற்பங்கள் போன்ற பழம் பொருட்களைப் பதிவு செய்தல் போன்ற பணிகளை மிகச் சிறப்புறச் செய்து வருகின்றது. இப்பணிகள் தொடர்ச்சியாகச் செய்யப்பட்டுத் தரவுகள் அனைத்தும் நூல்களாக வெளியிடப்பட்டு வருகின்றன. மேலும் அவ்வப்போது கிடைக்கும் அரிய செய்திகளையும், வரலாற்றுச் சான்றுகளையும் உடனுக்குடன் அனைவரும் அறியும் வகையில் ‘கல்வெட்டு’ எனும் காலாண்டிதழில் வெளியிடப்பட்டு வருகின்றது. மூர்த்தி சிறியது எனினும் கீர்த்தி பெரிது என்பது போல் இக்காலாண்டிதழ் பக்கங்களால் சிறியது எனினும் அரிய பல வரலாற்றுச் செய்திகளையும், நிகழ்வுகளையும் தாங்கி நிற்கின்றது. இதில் வெளியிடப்படும் அடிப்படைதரவுகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வறிஞர்களுக்கும், மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் மிக்க பயனுடையதாய் உள்ளன என்பதில் ஏதும் ஐயமில்லை.

1974-ஆம் ஆண்டு தொடங்கி இதுகாறும் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்ற ‘கல்வெட்டு’ இதழின் 75-ஆவது இதழ் என்பதால் பவழவிழா இதழாக வெளிவருகின்றது. இதில் குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்பும் உண்டு. ’முதற்காலாண்டிதழின் முதற் கட்டுரையாக வெளியிடப்பட்டது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ‘என்னைக் கவர்ந்த கல்வெட்டு’ என்ற கட்டுரையே. அன்று தொடங்கி இன்று வரை கல்வெட்டுகளின் இன்றியமையா வரலாற்றுச் சிறப்புணர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கல்வெட்டு அறிஞர்களைப் பாராட்டும் முகமாக ஒரு கோடி ரூபாய் தன் நிதியிலிருந்து வழங்கியுள்ளார்கள் என்பதற்குக் கல்வெட்டுப் பணியை முதன்மைப் பணியாகச் செய்துவரும் தொல்லியல் துறையின் நன்றியினைத் தெரிவிக்கும் வகையிலும் இச்சிறப்பிதழ் வெளியிடப்படுகின்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் இருகட்டுரைகளும், இத்துறையின் முதல் சிறப்பு அதிகாரியாக பணிபுரிந்த அமரர் திரு. தி. நா. இராமச்சந்திரன் மற்றும் முனைவர் இரா. நாகசாமி அவர்களின் கட்டுரைகள் இன்றைய தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில் மீண்டும் அச்சிடுவதில் இத்துறை பெருமை கொள்கிறது.

மேலும், இந்த சிறப்பிதழில் விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், பனைப்பாடி கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சமணச் சிற்பம் பற்றிய குறிப்பு மற்றும், கல்வெட்டு செய்திகள், தொல்லியல், செப்புப்பட்டயம், வரலாறு என அனைத்துப் பகுதிகளையும் வெளியிட்டுள்ளது. கல்வெட்டு காலாண்டிதழ் - 75 முதன்முறையாக இத்துறை அச்சுப்பிரிவுப் பணியாளர்களால் கணினி வழி அச்சுக்கோர்வை (D.T.P.) செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அனைவர்க்கும் பாராட்டுகள் உரித்தாகுக. பதிப்புப் பணியினை ஒருங்கிணைத்துச் செய்தளித்த கல்வெட்டாய்வாளர் திருமதி அர. வசந்தகல்யாணி அவர்களுக்கும் இதழ் வெளியீட்டில் உறுதுணையாயிருந்த கல்வெட்டாய்வாளர்கள் திரு. கி.சு.சம்பத், திரு. இரா. சிவானந்தம் ஆகியோருக்கும், அட்டைப்படம் மற்றும் நிழற்படங்கள் தொடர்பான பணிகள் மேற்கொண்ட திரு. மு. த. ஸ்ரீதரன் நிழற்படம் எடுப்பவர் அவர்களுக்கும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

14-11-2008

க. அருள்மொழி,

ஆணையர்

உள்ளே.


| | | பக்கம் |
|---|---|---|
| பதிப்புரை | | |
| 1. | என்னைக் கவர்ந்த கல்வெட்டு<br>- மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி | 1 |
| 2. | என்னைக் கவர்ந்த சிற்பம்<br>- மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி | 3 |
| 3. | ஆப்கானிஸ்தானத்திலே விநாயகர்<br>- திரு.தி.நா.இராமச்சந்திரன் | 4 |
| 4. | இராஜராஜன் - ஓர் ஆய்வு<br>- இரா.நாகசாமி | 9 |
| 5. | கல்வெட்டில் நீதி<br>- இரா.நாகசாமி | 23 |
| 6. | முதற் குலோத்துங்க சோழன் சுங்கம் தவிர்த்தது ஏன்?<br>- எஸ். இராமச்சந்திரன் | 28 |
| 7. | A Pāṇḍya Inscription from Sāyalkuḍi<br>- S. Swaminathan | 32 |
| 8. | செந்தலை-சுந்தரேஸ்வரர் கோயில் கோபுரமும் சமணச் சிற்பங்களும்<br>- அர. வசந்தகல்யாணி | 34 |
| 9. | மணவூர் சமணச் சிற்பங்கள்<br>- து. துளசிராமன் | 36 |
| 10. | நாகப்பட்டினம் மாவட்டத்தில் பெருங்கற்காலப் பண்பாடு நினைவுச் சின்னங்கள் அகரம் ஒரத்தூர்<br>- ச.செல்வராஜ் | 37 |
| 11. | BIRDHEADED PAINTINGS AND SIGNIFICANCE IN ROCK ART OF TAMILNADU<br>- Dr. S. Vasanthi | 40 |
| 12. | கல்வெட்டில் நீரிழிவு நோய் பற்றிய குறிப்பு<br>- கி.சு.சம்பத் | 44 |
| 13. | சிதம்பரம் ஆடவல்லபெருமான் கோயிலில் சோழர்கால எண்ணெய்த் தொட்டி<br>- கோ. முத்துசாமி | 47 |
| 14. | கருவூர் வஞ்சிவேள் கல்வெட்டு<br>- நாக. கணேசன் | 49 |
| 15. | பனைப்பாடி சோழர்கால மகாவீரர் சிற்பம்<br>- இரா. சிவானந்தம் | 52 |
| 16. | MALAIPATTU-A PRE-HISTORIC SITE<br>- S.SreeKumar | 54 |
| 17. | பழனிச் செப்பேடுகள்<br>- ச. கிருஷ்ணமூர்த்தி | 56 |
| 18. | ஒன்பது கம்பளத்து நாயக்கர் செப்பேடு<br>- இரா. ஜெகதீசன் | 58 |





எடுத்தனூர் - திருவண்ணாமலை மாவட்டம்
(என்னைக் கவர்ந்த கல்வெட்டு)

# 1 என்னைக் கவர்ந்த கல்வெட்டு

மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி
தமிழக முதல்வர்

செங்கத்தில் உள்ள சிலையின் படமொன்றை இங்கே காணலாம். அச்சிலை என்னை மிகவும் கவர்ந்தது. வீரனொருவன் நிற்கின்றான். அவன் பின்னால் ஒரு நாய் நிற்கிறது. இதுதான் அந்தச் சிலையின் அமைப்பு. பல்லவர்களிலே பெரும்புகழ் பெற்ற மன்னன் மகேந்திரவர்மன் காலத்தியது அது. எருமைப் பண்ணையின் காவலன் அவன். அவனைக் கள்ளர்கள் வீழ்த்திவிடுகிறார்கள். வீரனுக்குத் துணையாக நின்ற நாய் அந்த அடிபட்ட வீரன் விழுந்து கிடந்த இடத்திலேயே, அவனை அடித்து வீழ்த்திய கள்ளர்களோடு போரிட்டு, அந்தக் கள்ளர்களை வீழ்த்தி வெற்றி கண்டது. இதைக் கல்வெட்டாக ஆக்கியிருக்கின்றார்கள். இன்றைக்குச் சிலை வைத்து, சிலைக்குக் கீழே யார் தலைவர், யார் திறப்பாளர் என்று எழுதினால் கூட கோபித்துக் கொள்ளுகின்ற புண்ணியவான்கள் எல்லாம் நாட்டிலே இருக்கின்றார்கள். அன்றைக்கு ஒரு நாய் இரண்டு பேரை அடித்துக் கடித்துக் கொன்றது. அதற்கு ஒரு கல்வெட்டு எடுத்தான். நன்றி மறவாதது நாய் மாத்திரமல்ல. அந்தக் காலத்துத் தமிழனும் நன்றி மறவாதவனாக இருந்தான் என்பதைக் காட்டிக் கொண்டான் அந்தக் கல்வெட்டின் மூலமாக.

எவ்வளவு அழகான கல்வெட்டு.

"கோவிசைய மயீந்திர பருமற்கு"

அவர்கள் மகேந்திரவர்மன் என்று எழுதினார்களோ அல்லது மகீந்திரவர்மன் என்று எழுதினார்களோ, கல்வெட்டிலே இருப்பது

"கோவிசைய மயீந்திர பருமற்கு முப்பத்து நான்காவது: வாணகோ அரைசரு மருமக்கள் பொற்றொக்கையார் இளமகன் கருந்தேவக்கத்தி"

காவல் காத்த அந்த வீரனுடைய பெயர் கருந்தேவக்கத்தி என்பதாகும். மகேந்திரவர்மனுடைய காலத்தில் 34-வது ஆண்டில், வாணகோ என்கின்ற

அரசருடைய மருமக்களான பொற்றொக்கையாருடைய இளமகன் கருந்தேவக்கத்தி.
"தன் எருமைப் புறத்தே வாடிபட்டான் கல்".

எருமைகளைக் காப்பாற்றுகின்ற அந்தக் காவல் கூடத்தில் அவன் கொல்லப்பட்டான்.

அந்த இடத்தில் "கோவிவன் என்னும் நாய்". நாயினுடைய பெயரே கோவிவன். இப்பொழுது ஏதேதோ பெயர்கள் வைக்கிறோமே, ஆங்கிலப் பெயர்களை நாடி - அப்பொழுது,

"கோவிவன் என்னும் நாய் இரு கள்ளரைக் கடித்துக் காத்திருந்தவாறு".

இப்படி அந்தக் கல்வெட்டிலே எழுதப்பட்டுள்ளது ஒரு நாயினுடைய வீரச் செயல்: அதற்கு முந்தி தான் எடுத்துக் கொண்ட பொறுப்பை கடமையுணர்வோடு செய்து, அங்கே கொல்லப்பட்ட ஒரு வீரனுடைய வாழ்க்கையை இந்தக் கல்வெட்டிலே அன்றைக்குக் காண்பித்திருக்கிறார்கள் என்றால் இது நம்முடைய பழங்கால மன்னர்களால், பழங்காலத் தமிழர்களால், தமிழ்நாட்டு மக்களால் எவ்வளவு போற்றப்பட்டிருக்கிறது என்பதனை நாம் அறிந்துகொள்ள முடியும்.

■ இக்கட்டுரை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் 'கல்வெட்டு' காலாண்டிதழ் தொடங்கப்பெற்றபோது முதல் இதழில் முதற் கட்டுரையாக 14-4-1974-ல் வெளியிடப்பட்டது.

◆⌘◆

# 2 என்னைக் கவர்ந்த சிற்பம்

மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி
தமிழக முதல்வர்

நான் மிகவும் அண்மையில் மதுரை மாவட்டத்திலுள்ள அழகர் கோயிலுக்கு சென்றிருந்தேன் கலைகளையெல்லாம் காண. அங்கு மணமண்டபம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கே மிக உயர்ந்த சிலைகளெல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. நான் அதை ஏற்றுக்கொள்கிறேனோ இல்லையோ, வேறு விஷயம். ஆனால் நரசிம்ம அவதாரம் இரணியனைத் தூக்கி அவனுடைய வயிற்றைக் கிழிப்பதாகச் சிலை இருக்கிறது. தூக்குவது ஒன்று, தூக்கி வயிற்றைக் கிழிப்பது ஒன்றுமாக இரு சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. தூக்கும்போது ஓர் உருவத்தை, ஒரு கனமான மனிதனை, மனித உருவத்திலே இருக்கின்ற அந்த ஆண்டவன் தூக்குகின்ற நேரத்தில், ஒரு மனிதனை இன்னொரு மனிதன் தூக்கும் போது அவனுடைய உடலில் எங்கேங்கே என்னென்ன வளைவுகள் ஏற்படும் என்பதையெல்லாம் அந்த சிலையிலே நான் காண்கிறேன். பெருவிரல் கீழே அழுத்தமாக ஊன்றப்பட்டிருப்பதைப் பார்க்கும் போது, எவ்வளவு பலத்தை அவனை தூக்குவதற்கு அந்த நரசிம்ம அவதாரத்திலே இருக்கின்ற அந்த மனித உருவத்திலும், மிருக உருவத்திலும் இருக்கின்ற அந்த சிலைக்குக் கூட அது அவசியமா என்ற கேள்விக்கு இடம் தராமல் அவ்வளவு உயிரோட்டத்தோடு அந்தச் சிலையை அங்கே உருவாக்கியிருக்கின்ற சிற்பியினுடைய கைவண்ணம் அவனுடைய ஆற்றல் அத்தனையும் எனக்குத் தென்பட்டது.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கோடையில் இத்துறையில் கல்வெட்டுப் பயிற்சி பெற்றவர்களுக்கு 22-5-1972-ல் சான்றிதழ் வழங்கியபோது ஆற்றிய உரையின் ஒரு பகுதி.

# 3 ஆப்கானிஸ்தானத்திலே விநாயகர்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையை நிறுவச் சிறப்பு அதிகாரியாகப் பணிபுரிந்த காலஞ்சென்ற
திரு. தி. நா. இராமச்சந்திரன்
அவர்கள் எழுதியது

இந்தியாவில் அண்மையில் அமைந்துள்ள ஆப்கானிஸ் தானத்திலே காபூல் நகருக்கு 10 மைல் அருகேயுள்ளஸகர்தார் (சங்கரதாரா) என்னும் ஊரில் மனதைக் கவரும் வேலைப்பாடு பெற்ற சிற்பங்கள் பூமியிலிருந்து வெளிப்பட்டன. அவை முறையே சூரியன், சிவன் மற்றும் மஹாவிநாயகர் என்று சொல்லப்படும் பரமசிவன் மகன் பிள்ளையார் ஆகிய படிமங்களாக ஆராய்ச்சியாளரால் தீர்மானிக்கப்பட்டுள்ளன. அவை நேர்த்தியான சலவைக் கல்லில் செதுக்கப்பட்டவை. விநாயகப் படிமம், குப்த காலத்திய சிற்பப் பாங்கை அனுசரித்து, சுருள் சுருளாக அழகு கொண்ட கேசத்துடனும் தோள் வரை நீண்ட வலம்புரி துதிக்கையுடனும், கௌசாம்பி நகரத்தில் காணப்படும் ஹரகௌரி சிற்பங்களில் போல் மேல் நோக்கிய ஆண் குறியுடனும், வாகனமே இல்லாமலும் காணப்படுகிறது. விநாயகர் தரித்துள்ள வஸ்திரத்தின் வேலைப்பாடு தனிமையில் நோக்கும் கால் குருவி வால், பறவையின் இறக்கை முதலிய சித்திரங்களுடன் கூடியதாயினும், சேர்ந்து நோக்கும்போது "அகான்தஸ்" எனப்படும் கிரேக்க தேசத்திய இலையின் வடிவை நமக்கு ஞாபகப்படுத்துகின்றது. விநாயகருக்கே உரிய தொந்தியோ காணப்படவில்லை. கிரேக்க படிமங்கள்போல் மார்பு பரந்தும் பலத்துடனும் காணப்படுகின்றது. மார்பிலே காணப்படும் பூநூல் சர்பத்தை நினைவூட்டுகின்றது. பூநூலின் பிரஹ்மமுடி சர்ப்பமுடியைப் போல் செதுக்கப்பட்டுள்ளது. இடது தந்தம் முறிந்தும், வலது தந்தம் ஒழுங்காகவும், நமது நாட்டிலுள்ள விநாயகர் படிமங்கள் போலவே, அங்கும் காணப்படுகின்றமையால், இங்குள்ள த்யானவழிபோல் அங்கும் பிள்ளையார் "ஏகதந்தர்" என வழங்கப்படுகிறார். பறவையின் இறக்கையென ஐயமுறும்படி, விசிறிபோல் விரிந்த காதுகளுடன் விளங்கும் காட்சி இவ்விநாயகப் படிமத்தைத் தொன்மையான காலத்தைச் சார்ந்ததெனக் குறிப்பிடும். நான்கு கைகளிலிருந்தும் மேலிரண்டும் முறிந்துவிட்டன. மேல் வலது கரத்தில் தாமரை மலரையும், கீழ் இரு கரங்களால் விநாயகர், இரு கணங்களின் தலையைத் தடவி அக்கணங்களின் பக்தி நோக்கை அங்கீகரிக்கும் காட்சியையும் காணலாம். குப்த சிற்ப முறைப்படி

கணங்கள் சுருள் கேசத்துடனும், சுருள் போன்ற காதணியுடனும், கழுத்தினருகே கண்டமாலையுடனும் தோற்றமளிக்கின்றன. கிரேக்க சிற்ப முறையிலே இம்மாதிரியுள்ள கணங்களையே "டால்பின்" என்பார்கள். விநாயகரின் தேகக்கட்டையும், வஸ்திரத்திலுள்ள அகான்தஸ் இலைச் சித்திரத்தையும் சிற்பப் பாங்கையும் சீர்தூக்கின், குஷானர்களுக்கும் குப்தர்களுக்குமிடையே, நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலே இப்படிமம் செய்யப்பட்டுள்ளதெனலாம். தற்காலம், காபூல் வாழ் ஹிந்துக்கள் இவ்விநாயகப் படிமத்தை "நரஸிங்கத்வாரா" என்னும் காபூல் நகரிலுள்ள ஹிந்துகள் அங்காடியில், கோயில் செய்து வணங்கி வருகிறார்கள்.

காடேஸ்

காடேஸ் என்னும் நகரம் ஹிந்து-ஆப்கானிய வாழ்க்கைக்கு முக்கியமான கேந்தரம். காபூல் நகருக்கு 70 மைல் தெற்கேயுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன், கார்டெஸின் வெளிப்புறத்திலுள்ள மீர்சாகா எனப்படும் இடத்திலுள்ள ஒரு நீரருவியில் சுமார் 12000 நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை தற்காலம் காபூல் காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளன. அவை 'புராணங்கள்' எனப்படும் இந்தியாவின் மிகவும் பழமையான நாணயங்களும், ஒஸ்தும்பரல் முதலான சிற்றரசு நாணயங்களும், இந்திய-பாக்ட்ரிய, இந்திய-பார்த்திய-இந்திய-ச்கிதிய என்னும் கிரேக்கக் கலப்பு கொண்ட நாணயங்களும், குஷான அரசுடையவும் ஷாஹி அரசர்களுடையவும் நாணயங்களெனவும், புதைபொருள் ஆராய்ச்சியினால் நமக்கு தெரியவருகிறது.

கார்டெஸின் சரித்திரம் ஆப்கானிஸ்தானத்திலே ஹிந்துக்களின் சீரும் சிறப்புங்கொண்ட காலத்தைச் சுற்றி அமைந்துள்ளது. 850 கி.பி.யில் லகடொர்மா என்னும் பெரு மன்னனின் மந்திரியான கள்ளரென்னும் வேதியன், காபூர்ஷாஹி, பராஹ்மனஷாஹி, ஹிந்து ஷாஹி, காபூல் ராயன்கள் என இந்நான்கு பேர்கள் கொண்ட ஒரே வம்சத்தை உண்டாக்கி, அதற்கு கர்டெஸை ராஜதானியாகக் கொண்ட அரசையும் அளித்தான். 871 கி.பி.யில் "சாந்ததேவ" அல்லது "சாமந்ததேவ" என்னும் காபூல்ஷாஹி மன்னனை சப்பரித் என்னும் இஸ்லாமிய வம்சத்தினனான யாகுப்-பின்-லைத் என்னும் வல்லரசன் போரில்வென்று காபூலைவிட்டே விரட்டிவிட்டான். தோல்வியுடன் வெளியேறிய காபூல்ஷாஹி ஹிந்து அரசன், காபூலுக்கு 70 மைல் தெற்கேயுள்ள கர்டெஸில் புது அரணைச் செய்துக் கொண்டு சிறிது காலம் நிம்மதியாக வாழ்ந்து வந்தான். ஆயினும் 878-900 கி.பி.யில் ஆம்ரோபின்லைத் என்பவனால் அங்கிருந்தும் துறத்தப்பட்டான். பிறகு இக்காபூல்ஷாஹி வம்சத்தைச் சார்ந்த மன்னர்கள்

ஸிந்து நதிவெளியை அடைந்து, ஓஹிந்து (தற்காலம் உஹிந்து எனப்படும்) என்னும் ராஜதானியைச் சுற்றியுள்ள நாட்டில் அரசு நடத்தி வந்தார்கள். ஓஹிந்து என்பது அட்டாக் தற்காலம் பாகிஸ்தானில் உள்ள பட்டணத்திற்கு 16 மைல் வடக்கேயுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் கர்டெஸின் அருகாமையில், ஒரு அழகிய சலவைக் கல்லில் செதுக்கப்பட்ட விநாயகப் படிமம் தோண்டி எடுக்கப்பட்டது. தற்காலம் காபூலில், தர்காபீர் ரதன்நாத் என்னும் இடத்தில் இவ்விநாயகர் கோயில் கொண்டு, காபூல் வாழ் ஹிந்துக்களால் வணங்கப்பட்டு வருகிறார். படிமம் 28" உயரம், 14" அகலம் கொண்டது. அதன் பீடத்தில் இரண்டு வரிகொண்ட கல்வெட்டு சாஸனம் காணப்படுகிறது. மொழி சம்ஸ்க்ருதம், எழுத்து தொன்மையான நாகரிலிபி, அதிலடங்கிய விஷயம் கீழ் வருமாறு:-

1. ओं संवत्सरे अष्टतमे महाज्येष्टमास शक्लपक्ष तिथै त्र्यैदश सुदि
10+3 कक्षे विशारव सुभे सि[०]हे जित्र [क]

2. र्म महत् प्रतिष्ठा पितमिदं महाविनायक परमभटारक
महाराजाधिराज क्षी षाहि रिवमूगलैः रव्यात षाहिपादैः

"ஓம் இது ஒரு அரிய பெரிய சிற்பசித்திரம். மஹாவிநாயகக் கடவுளுடையது, இச்சிலையை ப்ரதிஷ்டை செய்தவன் மஹாராஜாதிராஜனென்னும், பரமபட்டாரகனென்றெல்லாம் புகழ்பெற்ற ஷாஹி அரசன் ஷாஹிகிங்களன். இவ்வரசன்தான் செங்கோல்கொண்டு ஆண்ட எட்டாவது ஆண்டிலே மஹாஜ்யேஷ்டமாசம், சுக்லபக்ஷம், த்ரயோதசி, விசாகநக்ஷத்திரம், சூர்யன் ஸிம்ஹமாதத்திலுள்ள புண்ணிய தினத்தன்று இச்சிற்பத்தை பூஜைக்காக ப்ரதிஷ்டை செய்து, அதனால் புகழெய்தினான்."

லிபியின் பாங்கை, அனுஸரித்த கால இடையில் (Palaeography) இக்கல்வெட்டு கி.பி. ஏழாம் நூற்றாண்டென இடம் பெறுகிறது. மேலே, கி.பி. 850 ஆண்டில், வேதிய அமைச்சர் கள்ளரென்பான் ஷாஹி வம்சத்தை நிலைநாட்டினானென்றோமல்லவா? அதற்கு முரணாக அல்லவா இக்கல்வெட்டின் சான்றுவென சம்சயம் அப்படியல்ல ஐயப்படலான். காஷ்மீர் நாட்டின் செல்வமான கல்ஹணரின் ராஜதரங்கிணியில் காஷ்மீர்

மன்னர்களில் மிகவும் பழமையானவர்களின் நரேந்திராதித்யனென ஒரு அரசன் இருந்தானென்றும் அவனுக்கு கிங்கிளன் என மாறு பெயருண்டெனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப்போலவே, தற்காலம் கல்கத்தா, இந்தியன் மியூஸியம் காட்சி சாலையிலுள்ள நாணயமொன்றில் "கிங்கி[?]" என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாப் மாகாணத்தில் பலவிடங்களிலிருந்து ஜே.பி. ராலின்ஸியினால் கண்டெடுக்கப்பட்ட 9 நாணயங்களிலும் "கிங்கி[?]" என வரையப்பட்டேயுள்ளது. வின்ஸென்டு ஸ்மித் என்னும் நாணய விஞ்ஞானி இவை கி.பி. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையே என்றார். "கிங்கி" என்பதும், நமது கல்வெட்டிலுள்ள ஷாஹி கிங்கன்வென்பதும் ஒரு வம்சத்தையே. அதாவது ஷாஹி வம்சத்தையே குறிப்பதுடன், 850 கி.பி.க்கும் வெகுகாலம் முன்பே இந்த ஷாஹி வம்சமுண்டெனவும் தெள்ளென அறிவிக்கின்றது. ஆதலால் கால நிர்ணயத்தில் ஒருவித முரணுமில்லை.

கல்வெட்டில் மஹாவிநாயகரெனக் கூறியுள்ள நமது பிள்ளையாரை கவனிப்போம். கிரேக்க சிற்பம்போல், கால்களிலும், கைகளிலும், பரந்த மார்பிலும், தக்க பலக்கட்டுடன் காண்கின்றார் பிள்ளையார். கால்களின் அமைப்போ "ஆலீட" மென்னும் பக்க அசைவுடனேயே காணப்படும். தும்பிக்கை இடதுபுறம் திருப்பத்துடனும் முறிந்த தந்தமும் இடதுபுறமெனவும் இங்கு கூறியுள்ளது. சார்நாத்தில் குப்த காலத்தில் உண்டான சிற்பபாணியை ஒட்டியே இச்சிற்பத்தின் அணிகலமாகும். தலையில் ஒட்டியும், அழுத்தமுடனும் வைக்கப்பட்ட சிறு மகுடமும் கழுத்தில் மணி, பவழம், வளையங்களுள் கோர்க்கப்பட்ட கண்டஹாரமும் இச்சிற்பம் பின்குப்த காலத்தில் (500 கி.பி.) செய்யப்பபட்டிருக்கக் கூடுமென வலியுறுத்தும் சான்றாகும். இரண்டு செவிகளும் இலைபோல் சித்தரிக்கப்பட்டமையால், பறவைகளின் விரிந்த இறக்கைகளை நினைவூட்டும், கைகளெல்லாம் ஒடிக்கப்பட்ட பரிதாப நிலையிலிருந்தும், அவை நான்கெனவும், செய்யப்பட்டபொழுது மிகவும் நேர்த்தியாகயிருந்திருக்கவேண்டுமென்றும், சிற்பத்தைப் பார்க்கும்பொழுதே நமக்குத் தெரியும். ஒரு பாம்பே விநாயகரின் யஞோபவீதம். பாம்பு எப்படி பூநூலாயிற்று? இப்பொல்லாப் பாம்பின் கதை மிகவும் விந்தையானது. விநாயகர் சதுர்த்தியன்று, பக்தர்களின் அழைப்பிற்கிணங்கி அங்கங்கு சென்று பக்தர்களளித்த மோதகங்களையுண்டு, தனது வாஹனமேறி பவனி வந்தார் விநாயகர். வழியில் பாம்பொன்று தென்பட, பிள்ளையாரின் வாஹனமான எலி தன் இயற்கை வைரியைக் கண்டு தன்னை விழுங்கிவிடுமே இப்பொல்லாப் பாம்பு என பயந்து, வளை தேட ஓடவும், அவ்வோட்டத்திலே பிள்ளையார் நிலை தவறி கீழே விழவும், வயிறுகுலுங்க

விருந்த மோதகக் குவியலும் பிள்ளையார் வயிறு நீங்கி கீழே விழுந்தோடவும், அதை இழக்க மனமில்லாமல் பிள்ளையார் அக்குவியலை மறுபடியும் தனது குஷியிலே அடைத்து, அடைப்பு விரியாமலிருக்க, அப்பொல்லாப் பாம்பையே கயிறாகச் செய்து தனது குஷியைச் சுற்றியும் யக்ஞோபவீதமாகவும் செய்தாரென்பதுமே இப்பொல்லாப் பாம்பின் கதை. மறுபடியும், இக்காஷியுடன், தனது எலிவாஹனமேறி பவனியுடன் வந்தார். அப்பொழுது, விண்ணிலே சந்திரன் உதயமாகி இருந்தான். பிள்ளையாரின் மோதக வரலாற்றையும், அவருக்கு நேர்ந்த இக்கட்டையும் கண்டு நகைத்தான். நகைவொலியைக் கேட்டு, பிள்ளையார் வெகுண்டு, தனது இடது தந்தத்தை முறித்து சந்திரன் பேரிலெறிந்தார். அந்த தந்தமே சந்திரன் மேனியிலே சொருகுண்டு இப்பொழுதும் கருத்த களங்கமாகக் காணப்படுகிறது என்பார் பௌராணிகர்.

மஹாவிநாயகர் சக்தி வாய்ந்தவர் .அவரையே மஹா கணபதி யென்போம். மிகுந்த பலமும், கேட்போரின் அவாவைத் தணிக்கும் வல்லமை பூண்டவருமாவார். மேல்நோக்கியுள்ள அவரது ஆண்குறி அவர் வல்லமையும், அவர் "வல்லப" உருவத்தையும் நமக்குத் தெரிவிக்கும். அரையிலிருந்துள்ள அவரது வஸ்திரத்திலே, கீர்த்திமுகமெனப்படும் சிங்கத்தின் தலையையும், தாமரை மொட்டுக்களையும், சிற்றுக்குருவிகளின் தோகையையும் அழகாகச் சித்தரித்திருக்கிறான் சிற்பி. உடல், வயிறு, பாம்பு-பூநூல், உயர்நோக்கியுள்ள ஆண்குறி, கீர்த்திமுகம், பறவையின் தோகை, தாமரைமொட்டு முதலிய இச்சித்திரவேலை பீஹாரில் செழிப்புடன் வளர்ந்த மகதக்கலையின் வாசனையைக் குறிக்கும். ஆயினும், பலக்கட்டுடன் வாய்ந்த கால்களும், கைகளும், தொந்தியின் சிறுமையும், இவ்விநாயகச் சிற்பம் கிரேக்க கலையின் பொற்காலத்தைச் சார்ந்தது எனவே வலியுறுத்தும். அப்பொற்காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே உண்டாயிற்று. ஆறு, ஏழு நூற்றாண்டிலும் வளர்ச்சிபெற்று விளங்கியிருந்தது என்பதற்கு நமது மஹாவிநாயகச் சிற்பமே அத்தாட்சி. நமது தமிழ்த் தெய்வங்களிலே முதன்மை வாய்ந்த பிள்ளையார் அம்மாதிரியே ஆப்கானிஸ்தானத்திலும் திகழ்ந்தாரென்பதில் நாம் பெருமை கொள்வோம். இது போதாதா நமக்கு!

- இக்கட்டுரை தொல்லியல் துறையின் 'கல்வெட்டு' காலாண்டிதழ் 13-7-1974-ல் வெளியிட்டதன் மறுப்பதிப்பு.

* * *

# 4

# இராஜராஜன் - ஓர் ஆய்வு

இரா. நாகசாமி

இராஜராஜன் தமிழ்த் தாயின் ஒப்பருந் தவப்புதல்வன். அவனது ஆற்றலை, அவன் விட்டுச் சென்றுள்ள அளப்பரும் கலைச்செல்வங்களை, அவனது ஆட்சித் திறனை, எங்கோ மூலையில் புற்றிட்டுக் கிடந்த திருமுறைகளைத் தேடி எடுத்து அளித்த பெருமையை, இன்னும் பல சிறப்புகளை நோக்கும்போது இம்மன்னன் இந்திய நாட்டிலேயே ஆண்ட மன்னர்கள் அனைவரிலும் தலையாயவன், சிறந்தவன், போற்றிப் புகழத் தகுந்தவன் என்பது தெளிவு. பல மன்னர்களைப் பற்றிய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கிடைத்திருக்கின்றன. அவற்றில் பல அன்று ஆண்ட அரசர்களைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. ஆயினும் இராஜராஜனுடைய கல்வெட்டுகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. அவற்றில் பலவற்றை இராஜராஜன் எழுதும்படி தானே ஆணையிட்டான். ஆதலின் அக்கல்வெட்டு களிலிருந்து அம்மன்னனுடைய சிந்தனைகள் எவ்வாறு இருந்தன: அவன் செயலாற்றும் திறமை எவ்வாறு இருந்தது: அவனது தனித்தன்மை என்ன என்பதையும் மிகவும் தெளிவாக நாம் அறிய முடிகிறது.

தஞ்சையில் இராஜராஜன் எடுப்பித்த பெருங்கோயிலில் பல கல்வெட்டுகள் இருக்கின்றன. இவற்றில் பல இராஜராஜனால் கொடுக்கப்பட்ட தானங்களை (பரிசுகளைக்) கூறுகின்றன. பிற மற்றவர்கள் அளித்த பரிசுகளைக் குறிக்கின்றன. இராஜராஜன் அளித்த பரிசுகளை மட்டும் நாம் ஆய்ந்தால் அம்மன்னனின் சிறப்பைத் தெளிவாக அறியலாம். தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, 'தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள்' என்ற தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டுள்ளது. இராஜராஜனது கொடைகள் அதில் இடம் பெற்றுள்ளன.

## கலன்கள்

இதில் பல அன்று வழக்கிலிருந்த அடுகலன்களின் பெயர்களை நமக்குத் தெரிவிக்கின்றது. தளிகை, மண்டை, கெண்டி, தட்டம், குடம், ஒட்டுவட்டில், கலசம், படிக்கம், நெடுமடல், மானவட்டில், கறண்டிகைச்செப்பு, இலைச்செப்பு, தாரைத்தாள்வட்டில், ஈச்சொப்பிக்கை, இலைத்தட்டு, மூக்குவட்டகை, கைவட்டகை, வட்டில், பிங்காளம், கச்சோளம், சட்டுவம், நெய்முட்டை, குறுமடல் ஆகிய கலன்களின் பெயர்கள் நமக்குக் கிடைக்கின்றன. இவற்றில் பெரும்பாலனவை பொன்னாலும், வெள்ளியாலும் செய்யப்பட்டவை.

இவற்றில் சில எவ்வாறு இருந்தன என்பதையும் இராஜராஜன் தெளிவாகக் குறித்திருக்கிறான். "தூக்கத்தில் தலையில் தைத்த பதினாறு உட்பட பொன்னின் கொடிக்கருக்கு இரண்டும், சிங்கபாதம் இரண்டும் உட்பட தாரைத்தாள் வட்டில்' (இந்த வட்டிலின் தாள்கள் சிங்கக் கால்கள் போல் செய்யப்பட்டிருந்தன). 'மூக்கும், அடியும் உட்பட கலசப்பானை.' 'அடியும் மூழலும் உட்பட கறண்டிச்செப்பு.' 'யாளிக்கால் நான்கும் மூழலும் உட்பட இலைச்செப்பு" என இம்மன்னன் தான் கொடுத்த சிறு பாத்திரங்களின் உருவங்களைக் கூடத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது போற்றத்தகுந்தது. ஒரு நெய்முட்டை கூட விட்டுவிடாமல் பதிவு செய்து வைத்துள்ளது எந்த அளவிற்கு கோயில் பொருள்களைக் காக்க வேண்டுமென்று பின்வரும் சந்ததியினருக்கு எடுத்துரைப்பது போல் விளங்குவதைத் காண்கிறோம். இவற்றை இராஜராஜன் பரிகலன்கள் என்று கூறுகிறான்.

இவற்றில் மற்றொரு சிறப்பும் உண்டு. இப்பரிகலன்கள். எங்கிருந்து வந்த பொருளால் செய்யப்பட்டவை என்பதைக் கூட இராஜராஜன் குறிக்கிறான். தன்னுடைய பண்டாரங்களிலிருந்து கொடுத்தவை எவை? சேரமானையும், பாண்டியர்களையும் மலைநாட்டில் தோற்கடித்தபோது கிடைத்த வெள்ளியைக் கொண்டு இங்கு செய்து அளித்த கலன்கள் எவை என்பதையும் தெளிவாகக் குறித்துள்ளது வியக்கத்தக்கது. தன்னுடைய பண்டாரத்திலிருந்தும், மாற்றரசர்களை வெற்றி கண்டபோது கொண்ட பண்டாரங்களிலிருந்தும், கொடுத்த பொன்னாலான கலன்கள் எவை என்பதையும் தெளிவாகக் குறித்துள்ளான்.

இந்தக் கல்வெட்டுகளில் 'தளிகை ஒன்று' என்று பல கலன்கள் திரும்பத் திரும்ப எழுதப்பட்டுள்ளதைக் காண்கிறோம். ஓரே வகையான கலன்களை ஏன் பல தடவை திரும்பத் திரும்ப எழுதவேண்டும் என்று கூட ஐயம் நமக்குத் தோன்றும். ஆனால் கல்வெட்டைச் சற்றுத் தெளிவாகப் பார்த்தால் இவ்வாறு எழுதியிருப்பதன் நோக்கம் தெரியும். ஒரே வகையைச் சார்ந்த கலமாக இருந்தாலும் அவற்றின் எடை வேறுபடுவதால் அவற்றைத் தனித்தனியாகக் குறித்துள்ளான். அது மட்டுமல்ல! மிக அதிக எடையுள்ள கலத்திலே தொடங்கி படிப்படியாக எடை குறைத்து வருகின்ற வகையில் அவற்றை வரிசைப்படுத்தி குறித்துள்ளதையும் காணலாம். உதாரணமாக ஒரு கல்வெட்டில் முப்பது தளிகைகளைக் குறித்துள்ளான். 983 கழஞ்சு எடையுள்ளதில் தொடங்கி 982, 981, 980, 978 என வரிசையாக எழுதப்பட்டுள்ளது எவ்வளவு கவனத்துடன் இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகும். இரண்டு கலன்கள் ஒரே எடை உடையவையாக இருந்தால் அவற்றை ஒரே வரியில் குறித்து விடுவதையும் காண்கிறோம். நெய் முட்டைக்குக் கூட எடை எடுத்து வைத்திருப்பது இன்னும் சிறப்பாகும்

### சிவபாதசேகரன்

இராஜராஜன் தான் எடுப்பித்த கோயிலிலே தனது தெய்வத்தை பிரதிஷ்டை செய்து அதனுடைய வழிபாட்டிற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துள்ளான். சிறந்த சிவபக்தனாதலின் தன் தெய்வத்திற்கு இராஜராஜேச்வரம் உடைய பரமஸ்வாமி எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தான். அந்த தெய்வத்தினுடைய புகழை, பெருமையை தான் என்றென்றும் போற்றி வணங்க வேண்டும் என்பது இராஜராஜனுடைய அவா. என்றென்றும் இராஜராஜேச்வரமுடைய பரமஸ்வாமியின் புகழை வெளி உலகத்திற்கு எடுத்துரைக்கும் அடியானாகத் தன்னை ஆட்படுத்திக் கொண்டான். அவன் பல காளங்களை இக்கோயிலுக்கு கொடுத்திருக்கிறான். அவை தங்கத்தால் செய்யப்பட்ட காளங்கள் ஆகும். இரண்டு குழல்களை உடையவை. அவற்றில் ஒன்றில் சிவபாதசேகரன் என்றும், மற்றொன்றில் ஸ்ரீ இராஜராஜன் என்றும் பெயர் பொறித்தான். தஞ்சைப் பெருங்கோயிலில் இனிது உறைகின்ற பரம்பொருளின் நாள் அணி விழாக்களில் இக்காளங்கள் ஊதப்படும்போது, அதன் மூலமாக 'இராஜராஜனும்', 'சிவபாதசேகரனும்' அத்தெய்வத்தின் புகழை மக்களுக்கு எடுத்துரைத்தனர். அந்த அளவிற்கு இராஜராஜன் பக்திப் பெருக்கினால் சிவபிரானின் திருவடியை என்றும் மறவாத சிந்தையனாகத் திகழ்ந்தான் என்பதை இது நமக்குக் காட்டுகிறது.

### வெற்றிமலர்

மாற்றரசர்களை வெற்றி கொண்டு தன் தலைநகருக்குத் திரும்பிய போது இராஜராஜன் செய்த முதற்பணி தன் தெய்வத்தின் முன்னிலையில் சென்று தங்கத்தினாலே பூக்களைச் செய்து தான் அடைந்த வெற்றிக்குக் காரணம் அப்பரம்பொருளே என்றும் அதுவே தன்னை வெற்றிக்கு ஊக்குவித்தது என்றும் இதயம் நெகிழ வணங்கி அதன் திருவடிகளில் பொற்பூக்களை அட்டித் தொழுதான்." "சத்தியாஸ்ரயனை எறிந்து எழுந்தருளி வந்து ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடி தொழுதன திருபொற்பூ ஒன்று-தாமரைச் செயல் திருபொற்பூ ஒன்று" எனக் குறிக்கிறான். இவ்வாறு கொடுக்கப்பட்ட பூக்களும் கணக்கெடுக்கப்பட்டு எடை எடுக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன.

### அணிகலன்கள்

இராஜராஜன் பெருங்கோயிலிலே இருந்த செப்புத் திருமேனிகளுக்கும் பரம்பொருளுக்கும் அணிவிக்க ஏராளமான திரு ஆபரணங்களை அளித்திருக்கிறான். இவற்றில திருப்பட்டிகை, முத்துவளையல், திருமாலை, ஸ்ரீசந்தம் முதலிய பல அணிகலன்கள் கொடுக்கப்பட்டன. அவற்றையும் மிக அழகாகவும்,

வரிசையாகவும் இராஜராஜன் பதிவுகளில் எழுதி வைத்திருக்கிறான். இவற்றை நோக்கும்போது இவ்வணிகள் எவ்வாறு செய்யப்பட்டன. எவை எவை கொண்டு கட்டப்பட்டன என்பதையெல்லாம் அறியமுடிகிறது. இவ்வணிகலன்களைச் செய்வதற்குப் பயன் படுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான முத்துக்களை இராஜராஜன் பெரியவுடையாரின் திருவடிகளிலே மலர்களாக அர்ப்பணித்து வணங்கினான் என்றும், அவற்றைக் கொண்டு இவ்வணிகள் செய்யப்பட்டன என்றும் அறிகிறோம். "உடையார் ஸ்ரீஇராஜராஜதேவர், ஸ்ரீபாதபுட்பமாக அட்டித் திருவடி தொழுத" என்று ஒவ்வொரு அணியிலும் குறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். வட்டம், அனுவட்டம், ஒப்புமுத்து, குறுமுத்து, நிம்பொளம், பயிட்டம், அம்புமுது, கறடு, இரட்டை, சப்பத்தி, சக்கத்து, குளிர்ந்த நீர், சிவந்தநீர், என்ற பலவகை முத்துக்கள் குறிக்கப்பட்டுள்ளது. அக்காலத்திலிருந்த முத்துக்களின் வகைகளை நமக்குத் தெரிவிக்கிறது. இவ்வணிகலன்கள், அவற்றின் நிறைக்கு ஏற்ப வரிசைப்படுத்திப் பதிவு செய்யப்பட்டன. நிறை எடுக்கும்போது சரடும், சட்டமும் நீங்க, உள்ளே வைத்து செய்த அரக்கும், பிஞ்சும் சேர்த்து எவ்வளவு நிறை என்று கணக்கெடுக்கப்பட்டது. தக்ஷிணமேருவிடங்கன் என்று பெயர் பெற்ற ஒரு எடையால் (காசுக்கல்) நிறை எடுக்கப்பட்டது.

### நவரத்தினங்கள்

இராஜராஜன் நவரத்தினங்களால் ஆன பல மோதிரங்களை அளித்திருக்கிறான். அவற்றில் முதலிலே குறிக்கப்படும் அணியில் நவரத்தினங்கள் எவை என்பதைத் தெளிவாக குறித்திருக்கிறான். வயிரம், நீலம், முத்து, புஷ்பராகம், கோமேதகம், பவழம், மரகதம், வைடூரியம், மாணிக்கம் ஆகிய ஒன்பதும் நவரத்தினங்கள் என்று அறிகிறோம். அடுத்துக் குறிக்கப்படும் நவரத்தின மோதிரங்களைச் சுருக்கமாக 'நவரத்திணம் ஒன்பது' என்று கூறி முடித்து விடுகிறான். இதிலிருந்து தான் குறிப்பவைகளை எவ்வளவு தெளிவாகவும், குறிப்பாகவும் இராஜராஜன் எழுதியுள்ளான் என்பதை அறியலாம்.

### திருப்பதியம்

இக்கோயிலிலே வழிபாட்டின்போது தேவாரத் திருப்பதிகங்கள் பாடித் தெய்வத்தைப் பரவ வகை செய்தான் அதற்காக நாற்பத்தெண்மரைத் தேவாரம் ஓதுபவராக அமர்த்தினான். திருப்பதியம் விண்ணப்பம் செய்தல் என்று கூறுகிறான் திருப்பதியம் ஓதும்போது அவர்களுக்குப் பக்கவாத்தியமாக உடுக்கையும், கொட்டி மத்தளமும் வாசிக்கப்பட்டன. அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு மூன்று குறுணி வீதம் தஞ்சாவூர் பண்டாரத்திலிருந்து நெல் அளிக்கப்பட்டது. திருப்பதிகம் பாடுபவர்கள் திருநாவுக்கரையன், சம்பந்தன், செம்பொற்சோதி, சீருடைகழலான், சீராளன், திருஞானசம்பந்தன், எடுத்தபாதப்பிச்சன், சிவக்கொழுந்து ஆகிய எழில்

மிகும் தமிழ்ப்பெயர் பூண்டு விளங்கினர். இதைத்தவிர இவர்கள் அனைவரும் சிவதீக்கை பெற்றவர்கள். ஒவ்வொருவருடைய தீக்கைப் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளதை இக்கல்வெட்டில் காண்கிறோம். இதிலிருந்து தெய்வத்தின் முன்னிலையில் தேவாரம் ஓதுவார்கள் சிவதீக்கை பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் என்று முன்னர் கட்டுப்பாடு இருந்தது என அறியலாம்.

## தேவரடியாள்

முற்காலத்தில் தெய்வீக வழிபாட்டின் அங்கமாக நாட்டியம் திகழ்ந்தது. பதினாறு அங்கங்களை உடைய வழிபாட்டு முறையில் கூத்து (நிருத்தம்) பதினைந்தாவது அங்கமாகக் குறிக்கப்படுகிறது. தாண்டவம் எடுத்துரைத்த தவச்செல்வர் சிவபெருமான் ஆதலின் அவர் உறைகின்ற கோயிலில் சுவர்களில் அப்பெருமான் ஆடிய 108 கரணங்களை (82 முடிவடைந்துள்ளன) சிற்பமாகச் செதுக்கி அமைத்த பெருமை இராஜராஜனையே சாரும். தில்லையிலே நடம்புரிகின்ற கூத்தப்பெருமானிடத்தில் எல்லையில்லா ஈடுபாடு கொண்ட இராஜராஜப் பெருந்தகை, தான் தோற்றுவித்த நடராஜப் பெருமானின் உருவங்களை 'ஆடவல்லான்' என்று அழைத்து அகமகிழ்ந்தான். தன் நாட்டில் வழங்கிய அளவுகளுக்கும் ஆடவல்லான் என்ற பெயர் சூட்டி மகிழ்ந்தான். இறைவன் ஆடிய ஆடலில தன் உள்ளத்தைப் பறி கொடுத்த இப்பெருந்தகை தன் நாட்டிலே ஆடலில் சிறந்து பெரும்புகழ் எய்திய நானூற்றுக்கும் மேற்பட்ட நாட்டிய மகளிர்களுக்குத் தான் தோற்றுவித்த பெருங்கோயிலில் நாட்டியப் பணிபுரியும் பேறு அளித்தான். இந்நாட்டிய மகளிர்கள் பல்வேறு கோயில்களிலே நாட்டியப் பணி புரிந்து சிறந்தவர்கள். இவர்களில் பலர் ஆடவல்லாள், ஐயாறு, புகழி, பெற்ற திரு, பாவை முதலிய அழகிய பெயர்களைக் கொண்டிருந்தனர். இராஜராஜன் மீது ஆறாத காதல் கொண்டிருந்த ஒருவள் 'இராஜராஜி' என்றே பெயர் கொண்டிருந்தாள்.

## தேவரடியாளாகத் தகுதி

இவர்கள் கோயிலிலே கூத்தாடுபவர்களே ஆயினும் இவர்களது தொழிலுக்குத் தேவையான தகுதியை இவர்கள் பெற்றிருக்கவேண்டும். உரிய கல்வியும் பயிற்சியும் உடையவர்களே தேவரடியாளாகக் கோயிலில் பணிபுரிய முடியும். இவர்களில் யாராவது இறந்துவிட்டால் அல்லது வேறு நாட்டிற்குச் சென்று விட்டால் இவரது அடுத்த வாரிசுகள் (அடுத்த முறை கடவார்) இப்பணியைச் செய்யலாம் என்ற குறிக்கப்பட்டது. இவர்களில் வாரிசாக இருந்தாலும் உரிய தகுதி, கல்வி பயிற்சி இல்லாவிட்டால் (அடுத்த முறை கடவார் தாம் தாம் யோக்யர் அல்லாதுவிடில் யோக்யராயிருப்பாரை ஆளிட்டு பணி செய்வித்துக் கொள்ளவும்) அவர்கள் பணி செய்யமுடியாது, ஆயினும் பணி தடைபடாமல்

இவர்களே தகுதியுடைய வேறு ஆட்களை நியமித்து இப்பணி செய்யலாம் என்று இராஜராஜன் பணித்தான். இதிலிருந்து இரண்டு செய்திகளை அறிகிறோம். ஒன்று கோயில்களில் பணிபுரிவாரின் சந்ததிகளுக்கு வருங்கால வாழ்வுக்கு வழி வகுக்கப்பட்டது. வழிவந்தவர்கள் என்ற காரணத்தினாலேயே அவர்கள் பணி செய்ய உரிமை உண்டு என்பது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சந்ததியாக இருந்தாலும் உரிய தகுதி பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு தகுதி பெறாவிட்டால் சந்ததியினரே வேறு தகுதியுடைய ஆளை அமர்த்திக் கொண்டு பணி செய்விக்கலாம். இந்த வாய்ப்பு மிகவும் இன்றியமையாதது. காரணம் சந்ததியினர் உடல்நலக்குறைவாலோ அல்லது பிறப்பிலே ஏற்பட்ட குறைகளாலோ வாழ வகையின்றிப் போய்விடக்கூடாது என்பதாகும். அவ்வாறு குறைபாடு உள்ளவர்களுக்கு அடுத்து வரும் தலைமுறை அப்பணியைச் செய்யக் கூடுமாதலின் அவர்களுக்கு இவ்வாய்ப்பை அளிக்கவேண்டும் என்று இராஜராஜன் கருதியிருக்கிறான். இதிலிருந்து அவன் எந்த அளவுக்குப் பணிபுரிவாரின் வாழ்விலும், அவர்களது சந்ததியாரின் வாழ்விலும் நலனிலும் அக்கறை எடுத்துக்கொண்டான் என்பது தெளிவாகிறது. அவ்வாறு அடுத்த சந்ததியினர் இல்லாது போய்விட்டால் பதிலாகத் தகுதியுள்ளவர்களை நியமிக்கக் கோயில் நிர்வாகத்தினருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இவ்வாறு நாட்டியப் பணிபுரியும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஓர் ஆண்டிற்கு 100 கலம் நெல் கொடுக்கப்பட்டது. 400-க்கும் மேற்பட்ட இந்த ஆடல் மகளிர்களுக்கு வசிப்பதற்கு என்று பல தெருக்களை அமைத்து ஒவ்வொரு வீட்டிற்கும் எண் இட்டு, எந்த வீட்டில் யார் இருந்தார்கள் என்பதையும் இராஜராஜன் கல்வெட்டு குறிக்கிறது. இவர்களுக்கு நாயகம் செய்ய சாவூர் பரஞ்சோதி என்பவரும் கோவிந்தன் சோமநாதன் என்பவரும் நியமிக்கப்பட்டார்கள்.

## நட்டவரும் இசைஞரும்

இவை தவிர இவர்களுக்கு நட்டவம் செய்ய எழுவர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் நிருத்தமராயன், நிருத்தப்பேரையன் முதலிய பட்டம் அளித்து கௌரவிக்கப்பட்டவர்கள். இதைத்தவிர பல இசைக்கருவிகளை இசைப்பதற்கும் ஆரியம் பாடவும், தமிழ் பாடவும், கொட்டி மத்தளம் வாசிக்கவும், முத்திரைச்சங்கு ஊதவும் பலர் நியமிக்கப்பட்டனர். இவர்களில் பலர் இராஜராஜனது பல்வேறு படைகளிலே பணிபுரிந்தவர்கள். படையிலே இசைக்கருவிகள் இசைக்கக்கூடிய வல்லமை படைத்தவர்கள் இராஜராஜனது படையிலே மிகுந்திருந்தார்கள் என்பதை நோக்கும்போது எவ்வளவு சிறந்த பண்பட்ட படையாகத் திகழ்ந்தது எனக் கண்டு வியக்கிறோம். உதாரணமாக குழல் ஊதுபவன் குதிரைப்படையிலிருந்து வந்தவன். பக்கவாத்தியம் வாசிப்பவர் பலர் பல்வேறு வலங்கை வேளைக்காரர் படையைச் சேர்ந்தவர்கள். கீழ்கண்ட படைகளிலிருந்து இசை வல்லுநர்கள் இப்பெருங்கோயிலுக்குப் பணிபுரிய அமர்த்தப்பட்டனர்.

இசை மிகுந்த படை

1. நிகரிலி சோழத் தெரிந்த உடநிலை குதிரைச் சேவகர்.
2. மும்மடி சோழத் தெரிந்த யானைப்பாகர்.
3. அழகிய சோழத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
4. க்ஷத்திரிய சிகாமணி தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
5. சத்ருபுஜங்கத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
6. ராஜ கண்டீவத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
7. ராஜராஜத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
8. அரிதுர்க்க வங்கணத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
9. மூர்த்த விக்ரமாபரண தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
10. மும்மடிசோழத் தெரிந்த பரிக்காரர்.
11. ரணமுக பீமத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
12. விக்கிரமாபரணத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
13. இளைய ராஜராஜத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.

இவற்றிலிருந்து இராஜராஜனிடத்தில் மூலப்படையாக இருந்த படைகளின் பெயர்களையும் அறிகிறோம்.

தொழிலாளியைப் போற்றிய இராஜராஜன்

இதிலிருந்து வேறு சில செய்திகளும் அறிய முடிகிறது. உடுக்கை வாசிப்பவனுக்கு ஸ்ரீஹஸ்தன், சகஸ்ரபாகு என்று பெயர் இருப்பது தொழிலுக்கு ஏற்ப உள்ள பெயராகக் காணப்படுகிறது. பள்ளித் தொங்கல் பிடிப்பான், விளக்கு எடுப்பார், நீர்த்தெளிப்பார், கணக்கு, வண்ணத்தான், நாவிசம் செய்வார், அம்பட்டன் முதலிய பலர் இங்கு பணி செய்ய அமர்த்தப்பட்டுள்ளார்கள். தையான், ரத்தினத் தையான், கன்னான், தட்டான் முதலிய பல தொழிலாளிகளும் இக்கோயிலில் பணிபுரிந்திருக்கிறார்கள். இக்கல்வெட்டிலிருந்து பல பெரும் சிறப்புகளை அறிகிறோம். இராஜராஜன் சிறு தொழிலாளிக்குக் கூட பெரும்பட்டங்கள் அளித்து அவர்களையும் இந்த திருப்பணியிலே ஈடுபடுத்தியிருப்பது அவனது பரந்த நோக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. தட்டானுக்குப் பெரும் தட்டான் என்றும், தையானுக்குப் பெருந்தையான் என்றும், நாவிதனுக்கு பெருநாவிதன் என்றும், கணிதம் வல்லானுக்குக் கணிதாதிராஜன் என்றும், பள்ளித்தொங்கல் பிடிப்பானுக்கு தொங்கல் பேரையன் என்றும் இவன் பட்டங்கள் அளித்துள்ளது தொழிலாளி வர்க்கத்தினர் அறிந்து இன்புறத்தக்கது. பலருக்கு மாராயன், பேரையன், அரையன் முதலிய பட்டங்கள் கொடுத்துச் சிறப்பித்திருக்கிறான். அவன் கொடுத்த பட்டங்கள் அவரவர் தொழிலுக்கு ஏற்ப அமைந்திருக்கின்றன.அத்துடன் அரச பட்டப்பெயர் ஒன்றையும் இணைத்துக்

கொடுக்கப்பட்டுள்ளது தொழில் புரிபவர்களை அரசன் எவ்வளவு உயர்ந்த நிலையிலே வைத்து மகிழ முடியுமோ அந்த அளவிற்கு சிறப்பித்திருப்பது இராஜராஜனின் தனிப்பெரும் தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு. இராஜராஜன் அளித்த சில பட்டப்பெயர்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

1. மும்முடிசோழ நிருத்தமராயன்.
2. மும்முடி சோழ நிருத்தப்பேரையன்.
3. அருமொழி நிருத்தப் பேரையன்.
4. வகையிலி நிருத்தப் பேரையன்.
5. பஞ்சவன் மாதேவி நாடகமையன்.
6. நித்தவினோத வாத்யமாராயன்.
7. அறிஞ்சிகை காமரப் பேரையன்.
8. ராஜேந்திர தசரையன்.
9. இருமடிசோழ வாத்யமாராயன்.
10. ராஜராஜ ஸ்ரீஹஸ்தன்.
11. ராஜராஜ சஹஸ்ரபாகு.
12. செம்பியன் வீணைஆதித்தன்.
13. மும்முடிசோழ தொங்கல் பேரையன். (திருத்தொங்கல் பிடிப்பான்).
14. செம்பியன் கொற்றப் பெருங்கணி.
15. ராஜராஜ கணிதாதிராஜன்.
16. ராஜராஜ ப்ரத்யோகத்தரையன்.
17. கேரளாந்தகப் பெருந்தையான்.
18. வீரசோழ பெருந்தையான்.
19. க்ஷத்திரிய சிகாமணி பெருங்கன்னான்.
20. க்ஷத்திரிய சிகாமணி பெருந்தட்டான்.

முதலியவை ஆகும். இப்பட்டங்களின் இனிமை கண்டு இன்புறுக.

## தஞ்சைக் கோயிலைக் கட்டிய ஸ்தபதி

இவ்வளவு சிறந்த கல்வெட்டில் இம்மாபெருங்கோயிலைத் தோற்றுவித்த சிற்பிகளின பெயரைக் குறிக்காமலா இருப்பான்? அவர்களின் பெயர்கள் குறிக்கப் பட்டுள்ளன. சிற்பிகளின் தலைவனுக்கு தச்சாசார்யன் என்று பெயர். வீரசோழன் குஞ்சரமல்லனான இராஜராஜப் பெருந்தச்சன் என்பவன் இக்கோயிலில் தச்சாசார்யனாகக் குறிக்கப்படுகிறான். இவனுக்கு உதவியாக குணவன் மதுராந்தகனான நித்த வினோதப் பெருந்தச்சன் என்பவனும், இலத்திச் சடையனான கண்டராதித்த பெருந்தச்சன் என்பவனும் பணிபுரிந்திருக்கிறார்கள். தற்காலத்தில் கோயில்களை நிர்மாணிக்கும் சிற்பிகளை ஸ்தபதி என்கிறோம். அவர்கள் அக்காலத்தில் பெருந்தச்சன் என்று பட்டம் பெற்றுச் சிறந்தனர் என பல கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். ஆதலின் இராஜராஜனது பெயர் பூண்டு இராஜராஜப் பெருந்தச்சன் என்று அழைக்கப்பட்ட தச்சாசார்யனே வியத்தகும்

தஞ்சைப் பெருங்கோயிலைத் தோற்றுவித்த தமிழகத்தின் தலையாய சிற்பி என்பதில் ஐயமில்லை.

இராஜராஜனது இக்கல்வெட்டில் மற்றொரு சிறப்பையும் காண்கிறோம். இராஜராஜன் இக்கோயிலில் பணிபுரியச் சிலருக்கு ஆணையிட்டிருக்கிறான். அவர்கள் சிலகாலம் இங்கு பணிபுரிந்திருக்கிறார்கள். ஆனால் இக்கல்வெட்டுகளைப் பொறிப்பதற்குள்ளாக அவர்கள் இறந்து போய்விட்டார்கள். அப்பணியைப் பிறர் செய்தனர். ஆயினும் நிலையான கல்வெட்டில் முதலில் அமர்த்தப்பட்டவர்கள் இறந்துபோனபோதிலும் அவர்களது பெயரையும் குறித்து அவர்களுக்குப் பின் வந்தவர்களுடைய பெயரையும் குறித்து வைத்துள்ள பெருமையைக் காண்கிறோம். கல்வெட்டு எழுதும்போது இறந்தவருடைய பெயரைக் குறிக்க வேண்டிய தேவை இல்லை. "ஆயினும் வீணை வாசிப்பார் இருவருக்கு சுப்ரமணியன் கூத்தனான செம்பியன் வீணை ஆதித்தனுக்கு பங்கு மூன்றரையும், இவன் செத்தமையில் இவன் மகனைக் கொண்ட அரையன் சதாசிவனுக்குக் காணியாகவும் பராந்தகக் கொங்கவாளில் கீர்த்தி நாதனுக்கு பங்கு முக்காலும் இவன் செத்தமையில் இவன் தம்பி கீர்த்தி கிளைதாங்கிக்கு காணியாகவும்" என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து பணி செய்தவன் இறந்த போதிலும் இராஜராஜன் அவனுக்கு எவ்வளவு பெருமை அளித்திருக்கிறான் என்று அறியலாம். இதுவும் இராஜராஜனுடைய பெருந்தன்மையின் எடுத்துக்காட்டு.

கோயில் பொறுப்பு

இக்காலத்தில் வங்கிகளில் பொருளாளர் (Cashier)களாகவும், கணக்காளர்களாகவும் நியமிக்கப்படுபவர்களிடத்தில் பிணைப்புப் பணம்(Security Deposit) பெற்று பிறகுதான் இவர்களை நியமிக்கிறார்கள். இராஜராஜன் தான் எடுப்பித்த கோயிலிலே பண்டாரத்தையும், கணக்கையும் வைத்துக்கொள்வார் எவ்வளவு சிறந்தவர்களாக இருக்கவேண்டும் என்பதற்கு உள்ள கட்டுப்பாடுகளைக் கல்வெட்டில் குறித்திருக்கிறான். இப்பணிகளில் அமர்த்தப்படுபவர்களுக்கு நிலையான நிலம் (பூமி சம்பத்து) இருக்கவேண்டும். நல்ல நிலையிலே உள்ள சொந்தக்காரர்கள் (பந்து சம்பத்து) இருக்கவேண்டும். பொருள் (அர்த்த சம்பத்து) உடையவர்களாக இருக்கவேண்டும். கோயில் பொது மக்களுக்காக எடுக்கப்படும் ஒரு பொது ஸ்தாபனம். ஆதலின் அதன் செல்வத்தை நிர்வகிப்பவர்கள், அதன் கணக்கை வைத்துக்கொண்டிருப்பவர்கள், உயர்ந்த நிலையிலுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவற்றில் ஏதாவது தவறு நேருமானால், தவற்றை சரிசெய்ய போதிய வாய்ப்பு இருக்கவேண்டும் என்ற உயரிய நோக்குடனே இராஜராஜன் மேல் குறிப்பிட்டுள்ள கட்டுப்பாடுகளை நியமித்துள்ளான். அதுமட்டுமல்ல, பரிசாரகம் செய்பவர்களுக்குக் காசும், நெல்லும்

பண்டாரத்தார்களும், கணக்கர்களும் உள்ளூர் பண்டாரத்திலிருந்து கொடுக்க வேண்டும் என்றும், பண்டாரிகளும், கணக்கர்களும் தங்களுடைய ஊதியத்தை நாட்டுப் பண்டாரத்தில் சென்று வேறொருவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் பணித்தான். கோயில் கணக்கு எந்த அளவிற்கு சீராக இருத்தல் வேண்டும் என்று இராஜராஜன் நினைத்தான் என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

பெரும் பணிமக்களின் பணி

தன் ஆட்சிக்கு உட்பட்ட பல ஊர்களிலிருந்து இக்கோயிலில் பணிபுரியும் கணக்கர்களையும், திருமெய்க்காப்பாளர்களையும், பண்டாரிகளையும், பரிசாரகர் களையும் நியமிக்க வாய்ப்பளித்தான். இவ்வாறு நியமிக்கப்பட்ட மெய்க் காப்பாளர்களுக்கு அந்தந்த ஊர்களே ஊதியம் தரவேண்டும் என்று நியமித்தான். தங்கள் ஊரிலிருந்து கோயிலுக்குப் பணிக்குச் சென்று வரும்போது ஏற்படும் செலவுகளுக்குப் படிச்செலவும் கொடுக்கவேண்டும் என்று நியமித்தான். அதிலிருந்து இராஜராஜனின் இன்னும் சில சிறந்த குணங்களை அறிய முடிகிறது. அவன் ஒரு மாபெரும் பேரரசன். இவன் நினைத்தால் துங்கபத்திரை ஆற்றங்கரையிலிருந்து ஈழம் வரையிலும் உள்ள பரந்த பகுதியிலிருந்து எவ்வளவோ ஆயிரக்கணக்கான ஆட்களை அவனே நியமிக்க முடியும். ஆயினும் அவ்வாறு செய்யாமல் தன் ஆட்சியிலிருந்த பல்வேறு ஊர்ச்சபைகளே ஆட்களை நியமிக்க வாய்ப்பளித்தான். தஞ்சைப் பெருங்கோயிலைத் தான் தோற்றுவித்த போதிலும் அது அனைத்து ஊர்களுக்கும் பொது என்ற ஓர் எண்ணத்திற்கும், அனைத்து மக்களும் இக்கோயிலிலே நமக்கும் பங்கு உண்டு, இதன் நிர்வாகத்தில் நாமும் பங்கு ஏற்கிறோம் என்று பெருமை கொள்ளும் வகையிலும் ஒவ்வொரு ஊருக்கும் வாய்ப்பளித்திருக்கிறான் என்பதை நோக்கும்போது இராஜராஜனுடைய உன்னத கருத்துகள் நமக்குத் தெளிவாகின்றன.

அரசனது இறை ஆலயத்துக்கு

தஞ்சையிலே தான் எடுப்பித்த இப்பெருங்கோயிலின் நடைமுறைச் செலவுகளுக்காகத் தனக்குச் சேரவேண்டிய இறையைக் கோயிலுக்கு அளிக்க ஆணையிட்டான். பல ஊர்களிலே உள்ள நிலங்களை இவ்வாறு இக்கோயிலுக்கு தேவதானமாக அளித்தான். இந்த ஊர்களையும், அளித்த நிலங்களையும் குறிக்கும்போது மிகவும் தெளிவாகக் குறித்துள்ளான். ஓர் ஊரிலே உள்ள மொத்த நிலம் எவ்வளவு? அவ்வூரில் கோயில், குளம், இருக்கை முதலிய இறை கட்டாத நிலங்கள் எவ்வளவு? மீதி இறை கட்டின நிலங்கள் எவ்வளவு? அந்த நிலங்கள் அளந்த இறை “இராஜராஜதேவர் கொடுத்த ஊர் நத்தம், கோயில், குளங்கள், அவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் புறவூருக்குப் போன வாய்க்கால்கள், பறைச்சேரி, கம்மாளச்சேரி, சுடுகாடு முதலிய இறையிலி நிலங்கள்

நீக்கி இறை கட்டின நிலத்தால் காணிக்கடன்" என ஆணையிட்டிருப்பதிலிருந்து அக்காலத்தில் வேளாண்துறை (துரவு) எவ்வளவு சிறப்பாக வகைப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்பட்டது என்பது புலனாகும்.

## ஆண்டானும் அடியானும் சமம்

தஞ்சைப் பெருங்கோயிலில் விளக்கு எரிப்பதற்காக பல பொருள்களை இராஜராஜன் கொடுத்திருக்கிறான். அதைச் சில கல்வெட்டுகள் குறிக்கின்றன. இக்கல்வெட்டிலிருந்து பல சிறந்த செய்திகளை நாம் அறிகிறோம். இக்கல்வெட்டில் பல உயர் அதிகாரிகளின் பெயர் குறிக்கப்பட்டுள்ளன. அவர்களது பெயர்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன. இவர்களில் பெரும்பாலானவர்கள் கோழிப் போரிலே பங்கு கொண்டவர்கள். கோழிப் போர் மிகவும் கடுமையாக நடந்திருக்க வேண்டும் என ஊகிக்கலாம். தனது படை வீரர்கள் கோழிப் போரிலே ஊனம் ஏதுமின்றி வெற்றி வாகை சூடித் திரும்பவேண்டும் என இராஜராஜன் வேண்டிப் பல விளக்குகளுக்கு வகை செய்துள்ளான். அவ்வாறு விளக்குகள் எரிப்பதற்கு பசுக்களையும், ஆடுகளையும், எருமைகளையும் அளித்திருக்கிறான். இவற்றை வீரர்களுக்கு அளித்து அவ்வீரர்கள் அவற்றை இக்கோயிலுக்கு கொடுத்திருக்கின்றனர். "வில்லவன் மூவேந்த வேளான் தன்னை உடையார் இராஜராஜதேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்குத் தந்த" என்று குறிக்கப்பட்டுள்ளது இதை நமக்குத் தெரிவிக்கிறது. இதே போன்று பல வீரர்களுக்கும் குறிக்கப்பட்டுள்ளது. இராஜராஜன் விளக்குகள் எரிக்கத் தான் சில ஆடுகள் அளித்தான். அவன் படை வீரர்கள் சில அளித்தனர். ஒரு விளக்கு எரிக்க சாதாரணமாக 96 ஆடுகள் அளிக்கப்படுவது மரபு. இதற்கு இராஜராஜன், தான் 48 ஆடுகளைக் கொடுத்தான். மீதி 48 ஆடுகளைத் தனது படைவீரன் அளிக்க வாய்ப்பளித்தான். தானும், தன் படைவீரனும் இணைந்து இவ்விளக்கு எரிக்க வகை செய்ததை, தங்கள் இருவர் பெயரையும் குறித்து பெருமைப்படுவதிலிருந்து காண்கிறோம். தனது வெற்றிகளுக்குக் காரணமாக உயிர் கொடுக்க முன் வந்த பெரும் வீரர்களுக்கு எவ்வித ஊனமும் ஏற்படக்கூடாது என்ற அவனது வேண்டுதலும், அவர்களுக்குத் தன்னுடன் சமநிலை அளித்த பெருமையும் இராஜராஜன் ஒருவனிடத்தில்தான் காண்கிறோம். வியத்தகும் பரந்த மனப்பக்குவம். இச்சிறந்த மன்னன் ஒரு விளக்குக்கு அல்ல பல விளக்குகளுக்கு தான் பொருள் கொடுத்தபோது தனது படைவீரனும் கொடுத்ததாகக் கல்வெட்டில் பொறித்துள்ள பெருமையைக் காண்கிறோம்.

## பணிப் பெண்ணுக்கும் சம அந்தஸ்து

படைவீரர் மட்டும்தானா? இல்லை. இல்லை. தன் கீழ் பணிபுரிகின்ற பணிப்பெண் கூட இதுபோல் விளக்குகளுக்குப் பொருள் கொடுக்கும் வாய்ப்பளித்து அவளுடைய பெயரையும் தனது பெயருடன் கல்வெட்டில் பொறித்துள்ள பெருமையைக் காண்கிறோம். "உடையார் இராஜராஜ தேவர்

கொடுத்த கால்மாட்டில் அடுத்த பசு நாற்பத்து இரண்டும் உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து பெண்டாட்டி (வேலைக்காரி) வரகுணன் எழுவத்தூர் திருவிளக்குக்கு வைத்த காசு" என குறிப்பிட்டுள்ள பெருந்தன்மையை, இராஜராஜனின் அளப்பரும் அன்புச்செல்வத்தைக் காணும்போது அவனுக்கு ஈடு இணையாக வேறு எந்தப் பேரரசனும் இருக்க முடியாது எனும் எண்ணம் மேலிடுகிறது.

இராஜராஜனுக்குத் தோள் கொடுத்து உடன் நின்று பணியாற்றிய வீரர்

1. பெருந்தரம் உத்தரங்குடையான் கோன் வீதிவிடங்கனான வில்லவன் மூவேந்தவேளான்.
2. பெருந்தரம் மாராயன் இராஜராஜன்
3. பெருந்தரம் கண்டாச்சன் பட்டாலகனான நித்தவினோத விழுப்பரையன்.
4. பெருந்தரம் ஆலத்தூர் உடையான் காளன் கண்ணப்பனான இராஜகேசரி மூவேந்தவேளான்.
5. பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்தவேளான்.
6. உடையார் இராஜராஜ தேவருக்கு நடுவிருக்கை செய்த இராஜேந்திரசிங்க வளநாட்டு மிறைக் கூற்று, காமரவல்லிச் சதுர்வேதிமங்கலத்து கோட்டையூர் பட்டன் பூவத்தன்
பூவத்தனார்.
7. பெருந்தரம் நித்த வினோத வளநாட்டு ஆவூர் கூற்றத்து செம்பங்குடிச் செம்பங்குடையான் அமுதன் தேவனான இராஜவித்யாதர விழுப்பரையன்.
8. உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து பெண்டாட்டி வரகுணன் எழுவத்தூர்.
9. உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் மும்மடி சோழத் தெரிந்த பரிவாரத்தார்.
10. சேநாபதி குரவன் உலகளந்தானான இராஜராஜமஹாராஜன்.
11. மூலபரிவார விட்டேறான ஜனநாதத் தெரிந்த பரிவாரத்தார்.
12. திருமந்திர ஓலை இராஜகேசரி நல்லூர் கிழவன் காறாயில் எடுத்த பாதம்.
13. பெருந்தரம் உலோக மாராயன்.
14. பெருந்தரம் இராஜகேசரி மூவேந்த வேளான்.
15. சோனகன் சாவூர் பரஞ்சோதி.
16. பெருந்தரம் வைரி சங்கரன்.
17. நித்தவினோத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்து அரைசூர் உடையான் ஈராயிரவன் பல்லவயனான மும்மடிசோழ போசன்.
18. பெருந்தரம் நம்பன் கூத்தாடியான ஜெயங்கொண்ட சோழ பிரும்ம மஹாராஜன்.
19. பெருந்தரம் வயலூர்க் கிழவன் திருமலை வெண்காடன்.
20. பெருந்தரம் அருமொழி பல்லவரையன்.
21. பெருந்தரம் நித்த வினோத வளநாட்டு மஹாராஜன்.

22. பெருந்தரம் வயிரி அருமொழியான கரிகால கர்ணப் பல்லவரையன்.

23. பெருந்தரம் கோன் குற்றியான அருமொழிப் பல்லவரையன்.

தஞ்சாவூர்ப் புறம்படியில் இருந்த தெருக்களும் குடியிருக்கைகளும்

தெருக்கள்

1. கந்தர்வத் தெரு.
2 மடைப்பள்ளித் தெரு.
3. வில்லிகள் தெரு.
4. ஆனையாட்கள் தெரு.
5. ஆனைக்கடுவார் தெரு
6. பன்மையார் தெரு.

பெருந்தெருக்கள்

1. இராஜவித்யாதரப் பெருந்தெரு.
2. வீரசோழப் பெருந்தெரு.
3. ஜயங்கொண்ட சோழப் பெருந்தெரு.
4. சூரசிகாமணிப் பெருந்தெரு.

அங்காடிகள்

1. கொங்கவாளார் அங்காடி.
2. இராஜராஜ பிரும்ம மஹாராஜந் அங்காடி.

பேரங்காடி

1. திரிபுவன மாதேவிப் பேரங்காடி

வேளம்

1. உத்தமசீலியார் வேளம்.
2. அபிமாந பூஷணத் தெரிந்த வேளம்.
3. உய்யக்கொண்டார் தெரிஞ்ச திருமஞ்சனத்தார் வேளம்.
4. இராஜராஜத் தெரிந்த பாண்டித் திருமஞ்சனத்தார் வேளம்.
5 அருமொழிதேவத் தெரிந்த திருப்பரிகலத்தார் வேளம்.

படைவீடு பிற

1. சிவதாஸன் சோலையான இராஜராஜ பிரம்ம மஹாராஜந் படைவீடு.
2. ரௌத்தர மஹா காளத்து மடவிளாகம்.
3. பிரம குட்டம்.

தஞ்சாவூர் உள்ளாலையில் இருந்த தெருக்களும், குடியிருக்கைகளும்

1. சாலியத் தெரு.
2. பாண்டி வேளம்.

இராஜராஜன் ஏராளமான செப்புத் திருமேனிகளைச் செய்து அளித்திருக்கிறான். அவற்றினுடைய உருவ அமைதியை, அவை கரங்களிலே கொண்டுள்ள சின்னங்களை, அவற்றின் எடையைக் குறித்துள்ள சிறப்பு அளப்பரும் சிறப்பாகும்.

"இராஜராஜப் பெருந்தகையே, தமிழகத்தின் தவச்செல்வமே, சிந்தனைத் தெளிவில், செயலாற்றும் திறனில், வெற்றிச் சிறப்பில், மக்கள் பால் கொண்ட பேரன்பில், கலை ஆர்வத்தில், அனைத்திற்கும் மேலாக பக்திப்பெருக்கில் உனக்கு ஈடு யார்? இணை யார்?" என வியந்து மகிழ்கிறோம். அவனது புகழ் கூறுவதிலே இன்பம் பெறுகிறோம். இது எங்கும் நிலைக்க இறை அருளை இறைஞ்சுகிறோம்.

---

■ இக்கட்டுரை தொல்லியல் துறையின் மேனாள் இயக்குநர் முனைவர் இரா. நாகசாமி அவர்கள் கல்வெட்டு காலாண்டிதழ் 14-4-1974-ல் வெளியிட்டதன் மறுபதிப்பு.

◆◆◆◆

# 5

# கல்வெட்டில் நீதி

இரா. நாகசாமி

தமிழ்நாடு அரசு தமிழகத்திலுள்ள பல்வேறு ஊர்களில் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து வரலாற்றைச் சீராக அமைப்பதற்கு ஒரு திட்டம் மேற்கொண்டு ஊர் ஊராகக் கல்வெட்டுகளை ஆய்ந்து வருவது அனைவரும் அறிந்ததே. கடந்த ஆண்டு வடஆற்காடு மாவட்டம், செங்கம் வட்டப் பகுதியில் சுமார் 60-க்கும் மேற்பட்ட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நடுகற்களைப் படியெடுத்து வந்துள்ளது. அவை தமிழக வரலாற்றிற்குச் சில சிறந்த செய்திகளை அளித்துள்ளதும் பல்லோர் கவனத்தைக் கவர்ந்துள்ளது. அண்மையில் இத்துறை கல்வெட்டாய்வாளர் திரு.கு.தாமோதரன் தாமரைப்பாக்கம் என்ற ஊரில் அக்னீஸ்வரர் கோயிலில் இருந்து படியெடுத்து வந்துள்ள ஒரு கல்வெட்டு மிகவும் சிறப்புடையதாக உள்ளது.

இக்கல்வெட்டு இரண்டாவது இராஜேந்திர சோழன் காலத்தில் அதாவது 12-வது நூற்றாண்டில் பொறிக்கப்பட்டது. இக்கல்வெட்டில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன். தம்பி இருவரும் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்ள, அதிலே அண்ணன் இறந்துவிட, அவர்களின் தந்தை வழக்கிட, ஊரார் எடுத்த முடிவைக் குறிக்கிறது. அன்று நாட்டவர் வழக்கை விசாரித்து அறிந்த முறையும், தண்டனை அளித்த முறையும் சிறப்பாகக் குறிக்கப்படுகிறது.

சண்டையிட்டுக் கொண்டவர்கள் வெள்ளாளர் குடியைச் சேர்ந்தவர்கள். அக்காலத்தில் ஒவ்வொரு குடிமக்களும் தங்கள் இனத்திற்கென ஒரு தனி சமுதாய அமைப்பை வைத்துக் கொண்டு தங்கள் இனத்திற்கு வரும் நன்மை, தீமைகள் ஆகியவற்றை அவ்வமைப்புகளை கேட்டு அறிந்து, எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொண்டனர். அக்காலத்து உழுதுவர்கள் சிறப்பு பெற்ற சித்திரமேழி நாட்டார் என்ற அமைப்பைக் கொண்டிருந்தனர். இவர்களுக்கென்று தனியே ஒரு மெய்க்கீர்த்தியே உண்டு. இவர்கள் தங்களை பூமிதேவி புத்திரர்கள் என்று அழைத்துக் கொண்டனர். அறத்தின் வழி நிற்பவர்கள் என்றும், சித்திரமேழி தர்மம் நீதி நடாத்துபவர்கள் என்றும் இக்கல்வெட்டில் இவர்கள் குறிக்கப்படுகிறார்கள் இவர்களுடைய சமுதாய அமைப்பிற்கு 'நாடு' என்று பெயர். இதில் அங்கம் வகிப்பவர்கள் 'நாட்டார்'

என்று அழைக்கப்பட்டனர். பல நாடுகள் கூடும் அமைப்பிற்கு 'பெரிய நாடு' என்றும், பங்கு பெற்றவர்களுக்கு 'பெரிய நாட்டவர்கள்', 'பெருக்காளர்' என்றும், அழைக்கப்படுகின்றனர். இந்த வழக்கைக் கேட்டவர்கள் இது போன்ற அமைப்பைச் சேர்ந்த பெரிய நாட்டவர்கள். இப்பெரிய நாடு இராஜேந்திர சோழனின் பெயரால் 'இராஜந்திர சோழ சித்தரமேழி பெரிய நாடு' என்று அழைக்கப்பட்டது.

இந்த பெரிய நாட்டிடம் கண்ணாபுரத்து வெள்ளாளன் தருப்பேருடையான் தாழிக்கோன் என்பவன் வந்து வழக்குரைத்தான். இவன் உரைத்ததையும், நாட்டார் கேட்ட கேள்விகளையும் இவன் அளித்த பதில்களையும் கல்வெட்டு மேற்கோள் போலக் குறிக்கிறது. "என் மகன் சங்கரத்தடியானும், என் மகன் பெரியானும் தடுபடுக்கிற இடத்துத் தம்பியை தமையன் அரிசப்பட்டு அடிக்க தம்பியும் தமையனை எதிரே அடித்தான். தம்பி அடிச்ச அடியிலே தமையன் பட்டான்" என்று அவர்கள் தந்தை எடுத்துரைத்தான்.

அப்பொழுது நாட்டார் அவனை நோக்கி கேள்விகளைக் கேட்டனர். "உனக்கு இவ்விருவரும் அல்லது மற்று மக்கள் உள்ளரோ" என்று கேட்டனர். "மற்று மக்கள் யாரும் இல்லை: இவர்கள் தாயும் நானும் உள்ளோம்" என்று சொன்னான். அடுத்து, "உனக்கு அர்த்தம் (பொருள்) தான் உண்டோ?" என்று கேட்க, "அர்த்தமும் இல்லை" என்றான். ஒரு குடி கேடானதையும், இவர்களைக் காப்பார் இல்லாததையும், பொருள் இல்லாததையும் கேட்டு நாட்டவர் ஒரு முடிவு எடுத்தனர். தம்பிக்கு இதற்காக மரண தண்டனை விதிக்க வேண்டாம். இவன் வயது முதிர்ந்த தாயையும் தந்தையையும் காக்க வேண்டியிருப்பதால் இவனுக்கு நேர்ந்த பாவத்திற்காக அவ்வூர் கோயிலில் அரை விளக்கு எரிக்க பொருள் அளித்தல் வேண்டும் என்று தீர்ப்பு கூறினர். அது கல்வெட்டில் 'ஒரு குடிகேடானமையாலும், இவர்களை ரக்ஷிப்பார் இல்லாமையாலும், அர்த்தம் இல்லாமையாலும், திருத்தாமரைப்பாக்கத்து திருஅக்னீஸ்வரமுடைய மகாதேவருக்கு நந்தா விளக்காக அரை விளக்கு வைத்து வயஸ்பரிணதை சென்ற தாயையும், தமப்பனையும் ரக்ஷிப்பானாக. தர்மம் நோக்கி இவன் இதற்குபடவேண்டா' என்று நாட்டார் விதித்தனர்.

இந்த தீர்ப்பை 'சுத்த பட்டிகை' என்று கல்வெட்டு கூறுகிறது. தவறிழைத்து செய்த பாவத்திலிருந்து தூய்மை பெற எடுத்த தீர்ப்பு ஆதலின் இது 'சுத்தபட்டிகை' என்று அழைக்கப்பட்டது. இம்முடிவெடுத்து அதற்கு கையெழுத்திட்டவர்களின் பெயர்களும் கல்வெட்டில் குறிக்கப் பட்டிருக்கிறது. இவர்கள் அனைவரும் வெள்ளாளர் என்று குறிக்கப் படுகின்றனர்.

இக்கல்வெட்டில் சில வடமொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. 'அர்த்தம்', 'வயபஸ்பரிணதை' முதலிய சொற்கள் உள்ளன. ஆயினும் இதுகாறும் கிடைக்காத நல்ல சில தமிழ் சொற்களும் கிடைத்துள்ளன. 'தடுபடுக்கிற இடத்து' என்ற ஒரு சொல் வந்துள்ளது. 'தடு' என்றால் எதிர்த்தல், மறித்தல் என்று பொருள். தடுபடுத்தல் என்றால் ஒருவரோடொருவர் எதிர்த்து அடித்துக் கொண்டதைக் குறிக்கிறது போலும். அடுத்து 'அரிசப்பட்டு' என்று ஒரு சொல் வருகிறது. அரிச என்றால் மகிழ்வு என்ற பொருள் அகராதிகளில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கு ரோஷப்பட்டு என்று பொருளில் வந்துள்ளது போல் காணப்படுகிறது. மற்றொரு இடத்தில் 'இவ்வகை பட்டாங்கு சொல்ல எழுதினேன்' என்ற ஒரு தொடர் வருகிறது. பட்டாங்கு என்பது, நீதி நூல்களில் குறிப்பிட்டுள்ளது என்ற பொருளில் இங்கே வழங்கப்பட்டுள்ளது ஒரு சிறப்பாகும்.

அவன் செய்தது தவறே ஆனாலும் அவனுக்களிக்கும் தண்டனையின் விளைவுகளையும் மனதில் கொண்டு தீர்ப்பளித்தனர் என்று தெளிவாக அறியலாம். "இவன் இதற்காக படவேண்டாம்" என்பதிலிருந்து இது போன்ற குற்றதிற்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்பதும் தெளிவாகிறது. வயது வந்த பெற்றோர்கள், பொருள் அற்றவர்கள், வேறு எவராலும் காக்கப்படும் வசதி அற்றோர்கள் இவனுக்கு அளிக்கப்படும் தண்டனையினால் பாதிக்கப்படக் கூடாது என்ற மனித பண்பிற்கு முதலிடம் கொடுத்து நாட்டார் தீர்ப்பளித்துள்ளது அறத்தின் சிறப்பைக் குறிக்கிறது.

இவர்கள் கல்வெட்டின் தொடக்கத்தில் அறம் வளர, புகழ் வளர, கலி மெலிய செங்கோலையே தெய்வமாகக் கொண்ட நாட்டார் என்று குறிக்கப்படுவது இவர்களது தீர்ப்புக்கு மிகவும் பொருத்தமாகத் திகழ்கிறது. இதுபோன்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பல செய்திகள் கல்வெட்டுகளில் இடம் பெறுகின்றன.

1. ஸ்வஸ்திஸ்ரீ இலங்கையும் யிரட்டபாடியுங் கொண்டு பேராற்றங்கரைக்
கொப்பத்தாஹவமல்லனை புறங்கண் டவன் ஆனையும்
குதிரையும் பெண்டிர் பண்டாரமுங் கொண்டு விஜையாபி
ஷேகஞ் செய்து வீரஸிம் ஹாஸனத்து வீற்றிருந்தருளிய
கோப் பரகேசரிவந்மரான உடையார் ஸ்ரீராஜேந்த்ரதேவர்க்கு
யாண்டு அஞ்சாவது ஸ்ரீசத்ருக்நதேவி வாதா(ணா)ம் ஸாதுவுண்ண
ஸநோத்ஸவஞ் சவகோம ஹிதாதய விதசௌவா
ஸாவஸந ஸ்ரீஸ

2. ஸ்ரீதேவிக்கு மக்கள்ளாகி யறம் வளா புகழக்க கலிமெலியச் செங்கோலே தெய்வமாகத் திசையனைத்துஞ் செவிடு படாமைச் சிதியமேழி ஶஉம் இனிது நடாதத்து ஸ்ரீராஜேஜ விதஜேளிப் பெருக்காளரோம் பங்கள நாட்டுத் தெற்கில் வகைச் செளுறுா் நாடான புதநலப்பாடி நாட்டுக் கநாவுரத்திருக்கும் வெள்ளாளன் தருப்பேறுடையான் தாழி கொன்னவஜ என் மகன் சங்காத்தடியனும் என் மகன் பெரியானும் தடுபடுக்கிறடத்துத் தம்பி

3. யை தமையன் அரிசப்பட்டு அடித்தான் அடிக்க தம்பியும் தெமையனை யெதிரே யடித்தான் தம்பியடிச்ச அடியிலே தமையன் பட்டான் என்று வந்து சொல்ல "உனக்கு இவ்விருவருமல்லது மக்களுளமே ராவென்று" கேட்க மற்று மக்களாருமில்லை இவர்கள் தாயுநானுமேயுள்ளோ மென்று சொன்னான் சொல்ல அதுந்தானுண்டோ வென்று கேட்க அதுமுமில்லை என இனென்ன ஒரு குடிக்கொடானமையிலும் இவர்களை ரக்ஷிப்பாரிலாமையி

4. லும் அதும் இலாமைலுந் திருத்தாமரைப் பாக்கத்துத் திருவ மநிஸ்ரமுடைய உஹாதேவர்க்குத் திருணந்தா விளக்காக அரை விளக்கு வைத்து வயஸ்ரிணதை சென்றதாயையுந் தமப்பனையும் ரக்ஷிப்பானாக உஉஉ நோக்கி இவனிதற்குப் படவேண்டா வெந்று பேருக்காளா் வியித்தமையில் இது சுத்த பட்டிகையாகவும் இது நோக்கியவனுக்கு தேவை புகுதாததாக்கவும் விதித்தோம் பெருக்காளரோம் இதனை அன்றேன்று எடுத்து கட்டுவான் பெரிய நாட்டுக்குப் பிழைத்தான் இவை சித்திர

5. மேழி நாட்டுப் பட்டனே என்னெழுத்து இப்படியறிவேன்மண்டை குளநாட்டுக்கு ராப்பாக்கத்து வெள்ளாளன் பிரம்பனூர் கிழவன் கேசன் படியன்னேன் இப்படி யறிவேன் இலத்தூர்ச் சேக்கிழான் அத்திமல்லன் சீராளன்னேன் இப்படி அறிவேன் தாமரைப் பாக்கிழான் ஆற்றி ஆடவலான்னென் இப்படியறிவேன் வயல்லாமூர் வெள்ளாளன் இலங்காடு உடையான் குட்டேறன் பொறகாளியேன் இப்படி அறிவேன் கீரனூர்ச் சாவலகாடாடி மணிகண்டனேன் இப்படி அறிவேன்
பாடா நாட்டு

6. கங்கக்நல்லூர் மரவேட்டன் இருங்கோளனென் இப்படி அறிவேன் தச்சத் தழானாபாடி வெள்ளாளன் வாரானூர் உடையான் நக்கன் பெரியனேன் இப்படி அறிவேன் களிக்கொற்றப் பாடி சாதந்தமுழான் குட்டேறனேன் இப்படி அறிவேன் சொமாசிபாடி வெள்ளாள தனந்தபிருதி வலி கருமாணிக்க னேன் இப்படி அறிவேன் பரமண்டலத்து பள்ளிகள் நாடு செவரன் சித்திரமேழினாடு உடையானென் இவ்வகை பட்டாங்கு சொல்ல எழுதினேன் தச்சுஊர் *ஸ்ராஹ்மணன் ஹாரத்*வாஜி திருவழுதி நாடனேன் இவை

7. என்னெழுத்து.

இக்கட்டுரை தொல்லியல் துறையின் மேனாள் இயக்குநர் முனைவர் இரா.நாகசாமி அவர்கள் 'கல்வெட்டு' காலாண்டிதழ் 13-7-1974-ல் வெளியிட்டதன் மறுபதிப்பு.

◆◆◆◆

6

# முதற் குலோத்துங்க சோழன் சுங்கம் தவிர்த்தது ஏன்?

எஸ். இராமச்சந்திரன்
கல்வெட்டாய்வாளர் (ப.நி.)

முதற் குலோத்துங்க சோழன் (1070-1120) சுங்கம் தவிர்த்த சோழன் என்ற சிறப்புப் பெயருடையவன் ஆவான். ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட மூவர் உலா,

*''புவிராசராசர் மனு முதலோர் நாளில்*
*தவிராத சுங்கம் தவிர்த்தோன்''*

என இவனைப் புகழ்கிறது. ''சுங்கம் தவிர்த்து இருள் நீக்கி உலகாண்ட குலோத்துங்கசோழ தேவன்'' எனக் கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன.

சுங்கம் என்ற சொல் சுல்கம் என வடமொழியில் வழங்கிற்று. இது உல்கு என்ற வடிவில் சங்க இலக்கியங்களிலும் திருக்குறளிலும் குறிப்பிடப்படுகின்றது. வணிகப் பொருள்கள், குறிப்பாக வெளிநாடுகளிலிருந்த இறக்குமதி செய்யப்படும் நுகர்வுப்பொருள்கள் மீது விதிக்கப்படும் வரியே உல்குஅல்லது சுங்க வரி என்று கருதப்படுகிறது.

''கழுதைச் சாத்தோடு வழங்கும் உல்குடையப் பெருவழி'' எனப் பெரும்பாணாற்றுப்படையும் (வரி 80-81), ''உல்குசெயக் குறைபடாது. நீரினின்று நிலத்தேற்றவும் நிலத்தினின்று நீர்ப் பரப்பவும் அளந்தறியாப் பல பண்டம் வரம்பறியாமை வந்தீண்டி'' எனப் பட்டினப்பாலையும் (வரி 125-132) குறிப்பிடுவ திலிருந்து இக்கருத்து சரியானதே எனத் தெரிகிறது.

இவ்வாறு நெடுங்காலமாக (ஒட்டக்கூத்தரின் வார்த்தைகளில் சொல்லப்போனால் சோழர்களின் குலமான சூரிய குலத்தின் முதல்வனான மனுவின் காலம் முதலாக) வசூலிக்கப்பட்டுவந்த சுங்க வரியைக் குலோத்துங்க சோழன் நீக்கினான் என்பது மிகுந்த பெருமைக்குரிய ஒரு செயலாகக் கருதப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. ஆனால், இத்தகைய ஒரு வரியினம் நீக்கப்பட்டதால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பினைக் குலோத்துங்க சோழன் எவ்வாறு ஈடுகட்டினான் என்பது குறித்த விவரம் ஏதும் சோழர் காலக்

கல்வெட்டுகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ குறிப்பிடப்படவில்லை. சோழர் வரலாற்றை ஆய்வு செய்த அறிஞர்களான கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் ஆகியோரும் இப்பிரச்சினை குறித்துத் தெளிவுபடுத்தவில்லை. எனவே, சற்று மாறுப்பட்ட கண்ணோட்டத்தில் இப்பிரச்சினையை அணுகித் தீர்வு கர்ண்பதற்கு முயற்சி மேற்கொள்ளலாம் எனக் கருதுகிறேன்.

எகிப்து நாட்டைச் சேர்ந்த யூசுப் அல் கரதாவி என்ற இஸ்லாமிய இறையியலாளர் சற்றொப்ப 25 ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்லாமிய நம்பிக்கைகளில் ஒரு புதிய போக்கினை உருவாக்குவதற்கான முயற்சியை மேற்கொண்டார். இஸ்லாத்தின் மீது நம்பிக்கை உள்ளவர்கள் வாழும் நாடுகள், நம்பிக்கை இல்லாதவர்கள் வாழும் நாடுகள் (தார் அல் ஸலாம், தார் அல்ஹரப்) என்ற இரண்டு விதமான நாடுகள் அல்லது மக்கள் தொகுதிகள்தாம் உலகத்தில் உள்ளன என்று பெரும்பாலான இஸ்லாமிய இறையியலாளர்கள் நம்புகின்றனர். "தார் அல் சுல்ஹ்" என்ற ஒரு பிரிவுக்கும் இஸ்லாமிய நம்பிக்கையில் இடமுண்டு என்ற கோட்பாட்டினை உருவாக்கக் கரதாவி முயன்றார். இந்த விவரம் குறித்து அண்மையில் ஒரு கட்டுரையில் படிக்க நேர்ந்தது. தார் அல் சுல்ஹ் என்ற அரபு மொழித் தொடருக்கு "இஸ்லாமியர்கள், ஒப்பந்த அடிப்படையில் உறவு கொண்டு இயங்கும் நாடு" என்பது பொருளாகும். அதாவது, இஸ்லாத்தைப் பின்பற்றாத ஒரு நாட்டில் வாழ நேர்கின்ற இஸ்லாமியர்களின் மத நம்பிக்கைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கின்ற பொறுப்பு அந்த நாட்டின் அரசுக்கு உண்டு. அதே வேளையில் அந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய கடமை இஸ்லாமியர்களுக்கு உண்டு. இந்த ஒப்பந்தத்தை மீறாத வகையில் இஸ்லாமியர்கள் இயங்க நேர்கிற நாடு தார் அல் சுல்ஹ் ஆகும் என்பதே சுரதாபி அவர்களின் வரையறை ஆகும்.

மேற்குறித்த வரையறையில் சுல்ஹ் என்ற அரபு (எகிப்திய?) மொழிச் சொல் ஆழ்ந்த ஒரு பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதே பொருளினை உல்கு அல்லது சுல்கம் (சுங்கம்) என்ற சொல்லுக்கும் நாம் பொருத்திப்பார்த்தால் குலோத்துங்க சோழன் குறித்த வரலாற்றுச் செய்திக்குப் புதிய பரிமாணம் கிடைக்கிறது. வெளிநாடுகளிலிருந்து பொருள்களைக் கொணர்ந்து உள்நாட்டில் விற்கின்ற வணிகர்களை வழிப்பறிக் கொள்ளையர் போன்றோரின் தாக்குதலிருந்து பாதுகாப்பதற்கும் அவர்களின் வணிகப் பரிவர்த்தனைகள் எவ்வித இடையூறுமின்றிச் சுமுகமாக நடைபெறுவதற்கும் பொறுப்பேற்கும் ஓர் அரசு அந்தப் பணிக்காக ஒப்பந்த அடிப்படையில் வணிகர்களிடைமிருந்து வசூலிக்கின்ற தொகையே சுங்க வரியாகும். பெரும்பாலும் அரசகுலப் படைவீரர்கள் அல்லது குடிகாவல்

நடைமுறைகளில் பயிற்சி பெற்றுத் தேர்ந்த படைவீரர்களே இப்பணியினை மேற்கொண்டனர். (இப்படை வீரர்கள் ஊதியம் பெறுகின்ற பணியாளர்களாக இல்லாமல் இறையிலி மானிய நிலங்களைப் பெற்ற அதிகாரத்துடன் வாழ்ந்துவந்த ஒரு குழுவினராக இருந்திருக்க வேண்டும்.) இத்தகைய படைவீரர்களின் பாது காவலையும் மீறி வணிகப் பொருள்கள் சூறையாடப்பட்டுவிட்டாலோ, வணிகர்களுக்கு ஊறு நேர்ந்துவிட்டாலோ அரசு, வணிகர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என்பதும், வணிகர்களின் வணிக நடவடிக்கைகள் அரசின் பிற கொள்கைகளுக்கும் உள்நாட்டுச் சட்ட திட்டங்களுக்கும் முரணாக அமையாத வகையில் இருந்திடவேண்டும் என்பதுமே இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையான ஷரத்துகளாக இருந்திருக்க வேண்டும்.

முதற் குலோத்துங்க சோழன் தந்தை வழியில் சாளுக்கிய குலத்தையும தாய் வழியில் சோழ குலத்தையும் சேர்ந்தவனாவான். மரபுக்கு முரணாகச் சோழ நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிய குலோத்துங்கன், பூர்வீகச் சோழ அரசு குடும்பத்திற்கு விசுவாசமாக இருந்த அரசகுலப் படைவீரர்களின் அதிகாரத்தைக் குறைக்கின்ற வகையிலும் பொருளாதார வலிமை படைத்த வணிகக் குழுக்களுக்குப் பெரும் சலுகைகள் கிட்டுகின்ற வகையிலும் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளான் என்பதில் ஐயமில்லை.[1] குலோத்துங்கன் ஆட்சிக்கு வந்தவுடன் கி.பி. 1071-ஆம் ஆண்டில் நடைபெற்ற வலங்கை இடங்கைப் பூசல்களுக்கும் இதுவே காரணமாகலாம், அரசகுலப் படைகளின் மானிய நிலங்களை அரசர்களிடமிருந்து கையகப்படுத்தியோ, வணிகர்களுக்குப் பாதுகாப்புப் படையாகச் செயல்பட்டுவந்த அரசகுலப் படைகளைக் கலைத்துவிட்டோ, அவர்களை வணிகர்களிடமிருந்து ஊதியம் பெறுகின்ற படைகளாக மாற்றி ஆணையிட்டோ ஏதோ ஒரு வகையில் வணிகர்களின் பாதுகாப்புப் பொறுப்புக்காக அரசு ஏற்றிருந்த செலவினங்களைக் குலோத்துங்க சோழன் முற்றிலுமாகத் தவிர்த்துள்ளான் என நாம் ஊகிக்கலாம். இவ்வாறு சுங்க வரி வசூல் செய்வதன் மூலம் ஈடுசெய்யப்பட்டு வந்த ஒரு செலவினம் இப்போது முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டுவிட்டதால் சுங்கவரி வசூல் செய்வது தேவையற்ற ஒன்றாக ஆகிவிட்டது. வணிகர்கள் அரசகுலப் படைவீரர்களையே தம்முடைய பணி மக்களாக வைத்துப் பராமரிக்க விரும்பினால் அதற்கு அப்படை வீரர்களும் சம்மதித்தால் - வணிகர்களே அவர்களுக்கு ஊதியம் வழங்கித் தங்களுடைய காவற்படையினராக அவர்களைத் தொடர்ந்து பயன்படுத்தி வரலாம் அல்லது கூலிச் சேவகர்களான புதிய படைவீரர்களை நியமித்தும் அவர்களைப் பராமரிக்கின்ற செலவினைத் தாங்களே ஏற்று "நமக்கு நாமே" என்பது போலவும் தங்களுடைய வணிக நடவடிக்கைகளைக் காத்துக் கொள்ளலாம். இத்தகைய நடவடிக்கை வணிகர்களுக்கும் உகந்ததாகவே அமைந்திருக்கும் என்பதிலும்

ஐயமில்லை. ஏனென்றால், சமூக அந்தஸ்தும் பாரம்பரியப் பெருமையும் மிகுந்த அரசகுலப் படைவீரர்கள் வணிகர்களுக்கு அளிக்கின்ற பாதுகாப்புக்காக வணிகர்கள் கட்டாயமாகச் செலுத்த வேண்டிய கட்டணமே சுங்க வரியாகும். மாறாக வணிகர்கள் தாங்களாகவே தம்முடைய பணியாளர்களுக்கு வழங்குகின்ற கூலி போன்றதே சுங்க வரிக்கு மாற்றாக வணிகர்கள் தற்போது ஏற்றுக்கொள்ள நேர்கிற புதிய செலவினமாகும். மற்றொரு வகையில் பார்க்கப்போனால், சுங்க வரி வசூலிக்கின்ற உரிமையை ஓர் அரசு தன் கையில் வைத்திருக்கிறதென்றால் வணிகர்களின் நடவடிக்கைகளைக் காக்கின்ற கடப்பாடு அந்த அரசைச் சார்ந்தது என்று பொருள். காப்பீடு (Insurance) என்ற கருத்தோட்டத்துடன் இதனை ஒப்பிடலாம். சுங்கம் தவிர்த்த செயல்பாடு என்பது அரசு ஏற்றிருந்த இந்த கடப்பாட்டுச் சுமையிலிருந்து அரசினை விடுவித்து விட்டது. எனவே, இது குலோத்துங்கனின் அரசுக்கும் சாதகமான ஒன்றாகவே அமைந்தது.

முதல் குலோத்துங்கனின் அரசியல் செயல்பாடுகளைப் பற்றியும், அவற்றின் விளைவுகள் பற்றியும் எனது "வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்" என்ற நூலில் (உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு, சென்னை, 2004) ஒரு குறிப்பிட்ட கோணத்தில் ஆராய்ந்துள்ளேன், இது குறித்து மேலும் விரிவாகவும் ஆழமாகவும் ஆராயப்படவேண்டும். குலோத்துங்க சோழனின் சுங்கம் தவிர்த்த செயல்பாடும் இத்தகைய ஆழமான ஆய்வுக்குரிய ஒன்றே என்பதால் இந்த ஆய்வு முடிவினை வரலாற்று அறிஞர்களின் முன்னிலையில் வைக்கிறேன்.

அடிக்குறிப்பு

1. சோழநாட்டில் வலங்கை - இடங்கைப் படைத்தளங்களுக்கு இடையில் கலவரத்தைத் தூண்டி, அக்கலவரத்தின் விளைவாக அதிராஜேந்திர சோழன் உயிரிழப்பதற்கு வகை செய்து அதன் மூலமாக முதற் குலோத்துங்கனின் வாரிசுரிமைக்கு இருந்த முதன்மையான சிக்கலை உதவியவர்கள் வணிகர்களே என்றும், அதற்கு பிரதியுபகாரமாகவே குலோத்துங்க சோழன் சுங்கவரியை நீக்கி வணிகர்களுக்குச் சலுகை வழங்கினான் என்றும் திரு. தி. நா. சுப்பிரமணியம் அவர்கள் வாதிடுகிறார்

பார்க்க: தெ.இ. கோயிற் சாசனங்கள்
பாகம் மூன்று பகுதி . II சரித்திரக்குறிப்புகள்
பக்கம் 87 to 101.
G.O.M.L 1957.

# 7 A Pāṇḍya Inscription from Sāyalkuḍi

S. Swaminathan

Sāyalkuḍi is a small hamlet in the Mudukulattur Taluk of Ramanathapuram District. A Vaṭṭeluttu inscription is found engraved on the tier of the *ardhamaṇḍapa* (north) of the śiva temple of the village.[1]

This inscription is in a fairly good state of preservation. However, the constant exposure to the vagaries of nature erased some letters. It measures 128 cms x 11 cms and it has four lines. It is dated in the 2+8 regnal year of a Pāṇḍya ruler Saḍaiyaṉ Māraṉ.

Regarding the subject matter of the record it mentions that during the tenth regnal year (2+8th year) of Saḍaiyan Māran (an individual) Kannan of Sakiilkuḍi donated a lamp and fifteen sheep for burning a lamp to the deity of the same village (Sakiilkuḍi), which was a *brahmadēya* of Ulōkachintāmani-valanāḍu. This charity was made for the merit of Ulokachintāmaṇippēraraiyaṉ Araiyaṉ Iḷaiyabhattāraṉ, who was the son of Kōn of Māṇimangalam.

At the outset itself it may be pointed out that this record belongs to the Pāṇḍya ruler Saḍaiyaṉ Māran Rājasimha (911-931 A.D.) the donor of the bigger Siṉṉamaṉṉur plates and an arch enemy of the Chōla ruler Parāntaka I (907-955 A.D.). This identification is plausible because the above king's inscriptions usually mention the regnal years opposite the second year.[2] The palaeography of the record also supports the view. Besides the inscriptions of this king are found throughout the Pāṇḍya country ranging from Cape Comorin to Kuḍumiyāmalai.[3]

It is evident that the present name of the village Sāyakuḍi was derived from its original name Sākiilkuḍi. It also goes to establish the antiquity of the village. However, there is no vestige in the village to sustain its hoary past except the temple, where the inscription in question is engraved.

This village is stated to be in the Ulōkachintāmaṇi-vaḷanāḍu. This territorial division has not been met with in any of the records copied so far nor is the region covered by this vaḷanāḍu known. The area in and around Sāyalkuḍi might have formed this valanaḍu. It is nor correct to say that this vaḷanāḍu might have been named after a member of Pāṇḍya royal family. As stated by Y. Subbarayalu "that vaḷanāḍu had existed even prior to the reign of Rājarājan I(985-1014 A.D.) in Pāṇḍimandalm and it seems these got vaḷanāḍu suffix by renaming after the attributes of some king like Pāṇḍimārttanḍa-vaḷanāḍu, Tiruvaludi-vaḷanāḍu etc."[4] Ulōkachintāmaṇi might even be a little of Pāṇḍya Rājasimha. This view gains strengh from the fact that the person after whom the charity was instituted bore the name Ulōkachintāmaṇipperaraiyan, for it is a well known practice in ancient Tamil country to assume the names of ruling kings and queens.[5]

## T E X T[6]

1. Svasti sri Kō-chchaḍaiya-Mārarkku yāṇḍu iraṇḍu idan-edir pattu ivvāṇḍu Ulōkachintā-
2. maṇi-vaḷanādu brahmadēyam[Sakiilkuḍi]-uḍaiyārkku tirunoṇdā-viḷakkukkukku iv-
3. vur Kaṇṇaṇ Māṇi-mangalattu-kkoṇ magaṇ Ulōkachintāmaṇi-ppēraraiyaṇ bhatārāṇ A-
4. raiyan Iḷaiyabhatārṇaich-chātti vachcha viḷakku oṇru āḍu padinaiñju[1*]

## NOTES AND REFERENCES

1. A.R.Ep. No. 1989-90 No. B.160.
2. Ep.Ind. Vol. XXVII, p.87.
3. S.I.I. Vol.XIV, Nos.46-78
4. Y.Subbarayalu, *Some reflections on Pandi-mandalam* c.700-1300 *Damilica* Vol.II, pt.3 p.27.
5. S.Swaminathan, *A Study of names as gleaned from Chola inscriptions - Studies in Indian Place Names,* Vol.XI, p.62.
6. From ink impression. This is the only inscription engraved in the temple.

# 8 செந்தலை-சுந்தரேஸ்வரர் கோயில் கோபுரமும் சமணச் சிற்பங்களும்

அர.வசந்தகல்யாணி
கல்வெட்டாய்வாளர்,(சி.நி.)
தொல்லியல்துறை, சென்னை-8

தமிழ்நாட்டில், தஞ்சை மாவட்டத்திலுள்ள பல ஊர்கள் சமண சமயத் தொடர்புடைய ஊர்களாக இருந்து வந்துள்ளன. திருவாரூர், திருப்புகலூர், பழையாறை, தீபங்குடி, கரந்தை, கூகூர் போன்ற ஊர்கள் கி.பி. 6-7-ஆம் நுற்றாண்டு முதற்கொண்டே சிறந்த சமணத் தலங்களாக இருந்தன. சமண மதம் தழைத்தோங்கிய இடங்கள் யாவும் அப்பர், ஞானசம்பந்தர் ஆகியோரின் காலடிபட்டு சைவத் தலங்களாக மாறின. சமணக் கோயில்கள் பலவும் சைவக் கோயில்களாக மாற்றப்பட்டன. இதற்குப் பெரியபுராணமும் சான்று தருகின்றது. சமணக் கோயில் இடிக்கப்பட்டு அக்கற்களைக் கொண்டு திருவதிகையில் குணபரீஸ்வரம் கட்டப்பட்டது என்று சேக்கிழாரின்

'வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனுந் திருவதிகை நகரின்கட் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்திலமண் பள்ளியொடு பாழிக்குற்
கூடவிஷத்துக் கொணர்ந்து குணபர வீச்சர மெடுத்தான்'

என்ற இப்பாடல் வரிகள் தெளிவாக்குகின்றன. இவ்வாறு ஆங்காங்கு, அவ்வப்போது சமணக் கோயில்கள் பலவும் சைவக் கோயில்களாக மாற்றப்பட்டன என்பதை உறுதிசெய்யும் சான்றுகள் பல கிடைத்துள்ளன. தஞ்சை மாவட்டத்திலுள்ள செந்தலை என்ற ஊரின் கண் அமைந்துள்ள சுந்தரேஸ்வரர் கோயிலின் கோபுரச் சிற்பங்கள், முன்பு சமணக் கோயிலாக இருந்து மாற்றப்பட்டதாகவோ அன்றிச் சமணக் கோயிலிருந்து கொண்டுவந்து சைவக் கோயிலில் வைத்துக் கட்டப்பட்டதாகவோ இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றன.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக் கலைப்படைப்பாகக் கருதப்படும் சுந்தரேஸ்வரர் கோயிற் கோபுரத்தில் பரகேசரி பராந்தகன் (கி.பி.907-953) காலத்திய கல்வெட்டொன்று உள்ளது. இக்கல்வெட்டிற்கும் சுந்தரேஸ்வரர்

கோயிலுக்கும், தொடர்பில்லை. ஏனெனில் அது சமணக் கோயிலைச் சார்ந்த கல்வெட்டு. சமணப் பெரியார் ஒருவரின் பெயரும், சமணத் தொடர்புடையது. இது அனைவரும் அறிந்த ஒன்றே.

ஆனால் கோபுரம் முழுமையும் சமணக் கோயிலைச் சார்ந்தது என்பது அறியாத ஒன்றாம். கட்டடக் கலை பற்றிய கண்ணோட்டத்தோடு அக்கோபுரத்தைச் சுற்றிவந்தபோது அதிட்டானம் முதல் கொடுங்கை வரையில் உள்ள அனைத்துக் கலையமைப்புகளுமே சமணக் கோயிலைச் சார்ந்தவை என்பது தெளிவாயிற்று. தேவகோட்டங்களின் மேலுள்ள மகர தோரணங்களில் நடுவே தீர்த்தங்கரர், யக்ஷி, யக்ஷன், தீர்த்தங்கரரின் வாகனங்கள் ஆகியவை செதுக்கப்பட்டுள்ளது. அலங்காரமாகச் செதுக்கப்பட்டுள்ள தோரணங்களின் நடுவிலும் ஆடல் மகளிர் அழகுற வடிக்கப்பட்டுள்ளனர். பார்ஸ்வநாதர் போன்ற தீர்த்தங்கரரின் சிற்பங்களும் எழிலாகச் செதுக்கப்பட்டுள்ளன. சிற்ப அமைதியைக் கொண்டு இவையனைத்தும் கி.பி.12-13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம்.. இவ்வூருக்கு அருகில் உள்ள திருக்காட்டுப்பள்ளிக் கல்வெட்டு ஒன்றில் மாறனேரியான ஜினசிந்தாமணிச்சதுர்வேதிமங்கலம் என்று குறிக்கப்படுவதாலும், இப்பகுதிகளில் எங்கோ சிறந்த சமணத்தலம் இருந்திருக்க வேண்டும் என்பதை உறுதியாகக் கூறலாம். சிறந்த கலைப் படைப்பாகக் கல்லில் வடிக்கப்பட்ட கி.பி.12-13-ஆம் நூற்றாண்டுக் கோயில் சுமார் இருநூறு ஆண்டுகளுக்குள்ளாகச் சிதிலம் அடைய வாய்ப்பில்லை. சமணக் கோயிலின் வடிவம் மாற்றப்பட்டு கி.பி.14-15-ஆம் நூற்றாண்டில் சுந்தரேஸ்வரர் கோயிற் கோபுரம் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். இன்று அவை சமணக் கோயிலைச் சார்ந்தவை என்பது தெரியாமலே வணங்கி வலம் வருதலைக் காண்கிறோம்..

♦♦♦♦

# 9 மணவூர் சமணச் சிற்பங்கள்

து. துளசிராமன்
காப்பாட்சியர்

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி வட்டம் மணவூர் கிராமத்தில் பிள்ளையார் கோயில் முன்புறத்தின் இருபக்கங்களிலும் உள்ள இரண்டு சமணசமயத் தீர்த்தங்கரர் சிலைகள் கடந்த 11-10-2007 அன்று ஆய்வு செய்யப்பட்டன.

மணவூர் பல்லவர் காலந்தொட்டுக் கல்வெட்டுகளில் "மணவூர்க் கோட்டம்" எனக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வூரின் சேக்கிழார் தெருவில் பிற்காலத்தைச் சேர்ந்த பிள்ளையார் கோயில் ஒன்று வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இப் பிள்ளையார் கோயில் கருவறையின் இருபக்கங்களிலும் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய இரண்டு சமணத்தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் தனித்தனியாகச் சுவரில் சார்த்தி வைக்கப்பட்டுள்ளன.

வலதுபுறம் உள்ள சிற்பம் :

இச்சிற்பம் 80 செ.மீ. நீளமும் 60 செ.மீ. அகலமும் கொண்ட ஒரு தனிக் கல்லில் புடைச்சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. தீர்த்தங்கரர் தியான நிலையில் அமர்ந்துள்ளார். தலையின் மேலே முக்குடையும், தலைக்கு பின்புறம் மூன்று ஒளி வட்டங்களும் காணப்படுகின்றன. சிற்பத்தின் இருபுறமும் இரண்டு இயக்கர்கள் தலையில் கரண்ட மகுடம் அணிந்து தம் வலது கரங்களில் சாமரம் வீசுவது போன்று காட்டப்பட்டுள்ளனர். தீர்த்தங்கரர் அமர்ந்திருக்கும் பீடத்தை மூன்று சிம்மங்கள் தாங்குகின்றன. இது சமண சமயத்தின் இருபத்துநான்காவது தீர்த்தங்கரர் ஆன மகாவீரர் சிற்பமாகும்.

இடதுபுறம் உள்ள சிற்பம் :

இச்சிற்பமும் 86 செ.மீ. நீளமும் 58 செ.மீ. அகலமும் கொண்ட தனிக்கல்லில் புடைச்சிற்பமாகவே வடிக்கப்பட்டுள்ளது. தீர்த்தங்கரர் இருகால்களை மடக்கிப் பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார், கால்களின் மீது இருகரங்களும் தியான நிலையில் ஒன்றன்மீது ஒன்றாக வைக்கப்பட்டுள்ளன. தலையின் மீது முக்குடையும் அதன் இருபுறமும் மலர்க்கொடி அலங்காரங்களும் பாங்குறச் செதுக்கப்பட்டுள்ளன. தீர்த்தங்கரரின் இருபக்கங்களில் இயக்கர்கள் இருவர் சாமரம் வீசுகின்றனர். பத்ம பீடத்தில் அமர்ந்துள்ளதாகக் காட்டப்பட்டுள்ள இத்தீர்த்தங்கரர் சிற்பம் ஆதிநாதர் உருவமுமாகும்.. இச்சிற்பங்கள் கி.பி.12 - 13-ஆம் நூற்றாண்டின் கலையமைதியைக் கொண்டு விளங்குகிறது. ◆

# 10 நாகப்பட்டினம் மாவட்டத்தில் பெருங்கற்காலப்பண்பாட்டு நினைவுச் சின்னங்கள் - அகரம் ஒரத்தூர்

ச. செல்வராஜ்
தொல்லியல் அலுவலர், தஞ்சாவூர்

அகரம் ஒரத்தூர் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டம், நாகப்பட்டினத்தில் இருந்து சிக்கல் சென்றடைந்து சிக்கலில் இருந்து மேற்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு வேற்குடி என அழைக்கப்படும் பகுதியில் உள்ளது இலுப்பைத் திடல். இப்பகுதி சிக்கல் கோயிலுக்குரியது எனத் தெரிவித்தனர். வேற்குடிப் பகுதியில் அமைந்த இலுப்பைத் திடலில் பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய முதுமக்கள் தாழிகள் சுமார் 20க்கும் மேற்பட்டவை புதைக்கப்பட்டுள்ளன. அவை தற்பொழுது சிதைக்கப்பட்டுத் திறந்த நிலையில் மேற்பரப்பிலே காண முடிகின்றது.

## பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் பெருங்கற்கால வகையைச் சார்ந்தவை இவை. இவற்றில் இறந்தவர்களைப் புதைக்கும் பொழுது பெரிய பெரிய கற்களைக் கொண்டு அறை போல அமைத்துப் புதைப்பது வழக்கம். எனவே தான் அக்காலத்தைப் பெருங்கற்காலம் என்று அழைப்பர். கற்கள் கிடைக்காத பகுதிகளில் மண்ணால் ஆன பானைகளை வனைந்து, அதற்குள் இறந்தவர்களையும், அவர்கள் பயன்படுத்தி வந்த பானை, குவளை, தட்டு மற்றும் பிற பொருட்களையும் உடன் வைத்து பூமிக்கு அடியில் புதைத்து விடுவார்கள். இதனை முதுமக்கள் தாழி என்று அழைப்பர். இது ஒருவகைப் பெருங்கற்காலப் பண்பாடு ஆகும். இந்த வகைப் பண்பாட்டுச் சின்னங்கள் இப்பகுதியில் அதிகமாகக் காணப்படுகின்றன.

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் பெருங்கற்காலப் பண்பாடு

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பல இடங்களில் முதுமக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டுள்ளன. பிரிக்கப்படாத தஞ்சை மாவட்டத்தில் பெரும்பான்மையான பண்பாட்டுச் சின்னமாக முதுமக்கள் தாழிகள் ஆங்காங்கே காணக்கிடைக்கின்றன.

தற்பொழுது நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிக்கல் ,ராஜேந்திரம், கீழ்பெரும்பள்ளம், கீழ்வேளூர், கொந்தகை, மணிக்கிராமம், வானகிரி, ஆக்கூர் அகரம் ஒரத்தூர், வேற்குடி போன்ற இடங்களில் இந்த பெருங்கற்காலப் பண்பாட்டு வகையைச் சார்ந்த முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அகரம் ஒரத்தூர்-வேற்குடி

இங்கு உடைந்த நிலையில் முதுமக்கள் தாழிகள் காணப்படுகின்றன. இந்த முதுமக்கள் தாழியில் குவளை, கலயம், தட்டு, பானை போன்றவைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை கருப்பு, சிவப்பு வண்ணத்தில் அமைந்த பானை (Black & Red) வகையைச் சார்ந்தவை ஆகும். இவை காலத்தால் மிகவும் முற்பட்டது. இந்த வகைப் பானை ஓடுகள் சுமார் 2500 ஆண்டுகட்கு முற்பட்டவை ஆகும். இவற்றுடன் சொரசொரப்பான சிவப்பு நிற பானைகள், முழுமையும் கறுப்புநிற பானைகள், குறியீடு பொறித்த பானைகள் போன்றவை சேகரித்து அருகில் உள்ள பள்ளியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

குறியீடுகள் பொறித்த பானை ஓடுகள்

அகரம் ஒரத்தூர்-வேற்குடியில் காணப்பட்ட முதுமக்கள் தாழியில் இருந்து எடுக்கப்பட்ட குறியீடு பொறித்த பானை ஓடுகள் குறிப்பிடத்தக்கவை ஆகும். இங்கு ஆறு வகையான குறியீடுகள் பொறித்த பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை முதுமக்கள் தாழிகள் காணப்பட்ட இப்பகுதியில் இருந்து எடுக்கப்பட்டவை. ஒரே இடத்தில் பல்வேறு குறியீடுகள் கொண்ட பானை ஓடுகள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவற்றில் முழுமையான பானைகளும், சில உடைந்த நிலையிலும், குவளை, தட்டு, பானை போன்றவற்றில் காணப்படுகின்றன. இந்த குறியீடுகள் தமிழகத்தில் பிற இடங்களில் கிடைத்துள்ள குறியீடுகளுடன் பொருந்துபவையாக உள்ளன.

இந்த குறியீடுகள் தங்கள் இருப்பிடங்களைக் குறிப்பவையாகவும், தங்கள் குறியீடுகள் மெல்ல மெல்ல வளர்ச்சி அடைந்து வருவதையும், அறியலாம். இதனை தமிழகத்தில் அழகன்குளம், மாங்குளம், கொடுமணல், மோதூர் போன்ற பிற அகழாய்வுகளில் கிடைத்துள்ள குறியீடுகள் தெளிவுபடுத்துகின்றன.

## இரும்புப் பொருட்கள்

பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்த மக்கள் இரும்பின் பயனை அறிந்து இரும்புப் பொருட்களைத் தயாரித்து பயன்படுத்தியுள்ளனர். எனவே, இக்காலத்தை இரும்புக்காலம் என்றும் அழைப்பர். அதற்கேற்ப பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் இரும்பிலான கத்தி, குறுவாள், கோடரி, ஈட்டி முனை போன்ற வேட்டைக்குப் பயன்படுத்தும் பொருட்கள் பல கிடைத்துள்ளன. அதே போன்று அகரம் ஓரத்தூர் பகுதியிலும் குறுவாள் ஒன்று சேகரிக்கப்பட்டுள்ளது. இது சுமார் 29.5 செ.மீ. நீளமும் 6.5 செ.மீ. அகலமும் உள்ளது. 5 துண்டுகளாக உடைந்த நிலையிலும் சேகரிக்கப்பட்டுள்ளது. இது பெருங்கற்கால பண்பாட்டில் இரும்பின் பயன்பாடு இருந்தது என்பதை வலியுறுத்த உதவுகின்றது.

மேலும், நாகப்பட்டினம் வட்டத்தில் காணப்படும் முதுமக்கள் தாழி காலத்தால் சுமார் 2500 ஆண்டுகட்கு முற்பட்டது என்பதையும் இம்மாவட்டம் தொன்மையான வரலாற்றுச் சிறப்பு கொண்டது என்பதையும் இங்கு கிடைத்த தொல்பொருட்சான்றுகளால் அறிகிறோம்.

### நாகப்பட்டினம் மாவட்டப் பெருங்கற்காலப் பண்பாட்டு நினைவுச் சின்னங்கள் அமைவிடம்

| வ.எண். | ஊர் | வட்டம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | ஆக்கூர் | மயிலாடுதுறை | நாகப்பட்டினம் |
| 2. | ராஜேந்திரம் | நாகப்படடினம் | ” |
| 3. | கீழப்பெரும்பள்ளம் | மயிலாடுதுறை | ” |
| 4. | வானகிரி | ” | ” |
| 5. | சிக்கல் | நாகப்பட்டினம் | ” |
| 6. | அகரம் ஓரத்தூர் | ” | ” |
| 7. | வேற்குடி (சிக்கல்) | ” | ” |

# 11 BIRDHEADED PAINTINGS AND SIGNIFICANCE IN ROCK ART OF TAMILNADU

**Dr. S. VASANTHI**
ARCHAEOLOGIST, CHENNAI

Globally the study of Rock art and their intetpretations gained momentum in the field of Archaeology. They not only denoted the artistic skill of the people who had painted them also their beliefs and their daily activities. The paintings on the rock shelters are mostly depiciting the hunting scenes and some human activities. It is interesting and noteworthy to discuss about the depiction of bird headed man in the rock art sites at Kilvalai and Settavatai in Villupuram District of Tamil Nadu.

Before going in to details of these paintings, these are good numbers of representation of bird headed human beings in the form of paintings, terracotta figurines and also in stone, found widely all over the world. The first and foremost depicion of bird headed man noticed in the cave paintings of Easter Island.[1] According to legend, before the coming of Christian religion the people in the Easter Island had an annual ceremony in which they chose their Tangata-manu, or bird-man. The ceremony combined the elements of a religious cult with those of a competition. The winner of the competition become the ruler of the Island for one year exactly and honoured as a deity. The bird man is represented in magnificent sculptures made of the hard wood which the islanders carved skilfully along with other figurines like fish, birds andhumans. The scholars believed that this bird cult, which was not found on the other oceanic islands or any where else in the world might be a survival of the beliefs of the people in the Easter Island and it might be the last trace of a vanished civilization.[2] There were number of depiction of bird headed man in the rock art sites in France and Spain.[3]

Another most spectacular figurine fron Catalhoyuk (Turkey) was one of the smallest, seated figurines with a bulging stomach and without other feminine features. It has a hole in the top of the body for the attachment of a head. The figurine is complete and undamaged and it belongs to first half of 6th millennium BCE.[4] This also resembles that of the bird man as noticed in the rock art.

The research on similarites between the magalithic cultures of South India and Southeast Asia was carried out by Dr. Ramanna, and he had stated that "at Sa-huynh and at Phuco, Annam, Indo-China, Mlle.Colani found some small zoomorphic figures inside and outside the jars, which are not found in any other region. One of them was a bird's head with a beak like that of a duck. An anthropomorphic figure had a head pierced by two openings, the eyes, a long neck, the body asymmetrical, coming to a point, without limb"[5] This proves the close contact as well as to some extent this areas remained as one huge land mass.

In India it is doubtful about the representation of the rock paintings with bird headed found in Northern part of India particularly in Madhya Pradesh and Chatisgargh region. But the anthropomorphic copper objects and terracotta figurines (termed as Athiti) occurred in the Gangatic Valley someway resembles the bird headed humans depicted in the rock arts.

In South India, particularly in Andhra Pradesh, Karnataka and Kerala number of Rock Art sites were discovered. In Andhra Pradesh Dr. Chandramouli had noticed some anthropomorphic figurines in the paintings on Rock.

In Tamil Nadu the State Department of Archaeology, Madras University, Tamil University, Thanjavur, and some freelance art historians noticed chain of Rock Paintings in and around Villupuram, Dharmapuri and Madurai region. The Rock Paintings at Kilvalai and Settavarai, are important for the study as there are paintings seen with the depicition of bird headed man.

Kilvalai: A hamlet twenty three Km from Villupuram lies in between (Latitude: 12°21'48;"N Longitude 79°20'29;"E) the paintings are found in four different rocky areas and were drawn with red ochre. First picture depicts three human beings postured side by side; one man seated on a horse, another holding its bridle and the third man standing with outstretched hands in a way of welcoming them. Some paintings of geometrical designs consisting of combined triangles, plus multiplication markings drawn inside the circles are also observed a picture of a sun with 17 rays is also noticed. The second group of paintings seems to be the biggest in size; it depicts six men standing in a row. The third group occurs deep inside the ledge; one has to crawl down to observe and decipher the paintings. Four men standing side by side while two others were shown standing aloof them. The

fourth group of paintings consists of men with horned head gear and faces resembling that of bird`s beak. The occurrence of designs and depiction of men rowing a boat inticates that the people knew the art of boat building and might have traded with their neighbours. The period assigned for these paintings are from 1000 BCE to 500 BCE.[6]

Settavarai: About 15 Km west of Kilvalai near Vettavalam in Villupuram district. (Latitute : $12^0$ 09' 42" N Longitude: $79^0$ 15'32"E). The paintings are seen on the rock shelters of Ayyanar Malai. the animals like deer, buffalo, wild boar, tiger, fish and some geometrical designs are found in three rock shelters at the top of the hill in an inaccessible area. The buffaloes and other animals were portrayed only with red ochre. But the facial part of the buffalo is totally is filled with red colour, while rear portion of the body show strokes; Outlines in some of the paintings had been done with red colour and the inner part filled with white pigments.

A well preseved painting of a deer, in white, standings near a fire and the flesh pierced with a long pole or spear being grilled in the fire is also seen; depiction of its bones resembles that of the paintings at Bhimbetka another important phenomenon of this paintings is the repeated occurrence of the human palm and Bird head human figure which were noticed in almost all ancient paintings. The date assigned to these paintings is 1000-500 BCE.[7]

The discovery of unique anthropomorphic figurine from Mottur in Chengam taluk of Tiruvanamalai district and Udayanatham in Villupuram district and a headless mother goddess terracotta figurine from the excavation at Modur are to be discussed in this contest. The comparative study of them reveal that they belong to the transition period ie., from Neolithic to Iron age (Megalithic), they might be due to the reminiscence of the ancient civilizaions.

A huge monolithic anthropomorphic figure found at Mottur about 25 Km west of Tiruvananmalai.[8] Another anthropomorphic stone figure as same as that of Mottur was discovered at Udayanattam, very near to Kilvalai rock paintings.[9] According to Dr. Rajan, similar figures were reported in Andhra Pradesh and Karnataka.[10], he also suggest that the installation of anthropomorphic figure at Mottur and Udayanattam would have come from the wertern part of Chittoor district from Andhra Pradesh through Javadi hills in Tamil Nadu.[11]

A Terracotta figurine in the depth of 1.05 mts from Modur excavation without ornament and beaked head is an interesting and significance find from trench MDR-11. It is crude in nature and hand made.[12] It is solid, the interesting aspect is the beaked head and breast is fixed manually. The hands are short. Back side of the figurine is plain. It looks like an anthropomorphic figurine ftom Udayanatham and the bird headed human figurines at Kilvalai.

Discussion: The ancient man could have observed the loss of breath after death, thus he would have realized the necessity of the life and believed in the existence of the soul. He might have imagined that after the death of the human being the soul or breath raises up wards in the form of a bird. The depiction of the bird headed human being would have the vision of the ancient man to represent a soul for the God of death. The man from the Easter Island, who was selected for the headship used to wear the bird head and he was honoured as a deity. Even today masked dances are an integral part of Indian culture in rustic and tribal living. To some extent we can say that these similarities were due to the drift of the huge land mass once remained intact as one i.e. Lamuriya.

To conclude, it is only a preliminary research, future analysis, probing on the above mentioned line may through light on the submerged continent.

---

1. Alexander Kondratov, The riddles of Three Oceans, Progress Publishers, Moscow-1974, pp-30-31
2. ibid. p 64
3. Andreas Lommel, Land marks of the World's Art, London, 1966, p27.
4. http: // www. smm. org/ catal
5. Ramanna, H.S., Megaliths of South India and South East Asia, ew Era Publications, Madras, 1983, p.61
6. Sridhar, T.S., Rock art of Tamil Nadu, Department of Archaeology, Chennai, 2005, pp 15-16.
7. Ibid, p21
8. Rajan, K, Archaeological Gazetteer of Tamil Nadu, Manoo Pathippakam, Thanjavur, 1997-p.206
9. Ibid, 207
10. Ibid 207
11. Ibid 207
12. Sridhar, T.S. Excavation of Archeological sites in Tamil Nadu, Modur (2004-2005), Dept. of Archaeology, Chennai. 2005, p14.

# 12 கல்வெட்டில் நீரிழிவுநோய் பற்றிய குறிப்பு

கி.சு.சம்பத்
கல்வெட்டாய்வாளர்(சி.நி.), சென்னை

தமிழ்நாட்டில் கிடைக்கப்பெறும் கல்வெட்டுகள் வாயிலாகப் பல்வேறு வரலாற்றுச் செய்திகளையும், எண்ணற்ற சமுதாயச் செய்திகளையும் அறிந்து வருகிறோம். குறிப்பாகக் கல்வெட்டுகள மூலம் மன்னர்களின் வெற்றி, ஆட்சிமுறை, கோயில் வழிபாடு, இறைவன் பெயர்கள், வரிகள், காசுகள் போன்ற பொருளாதார மற்றும் சமூகச் செய்திகள் அறியப்படுகின்றன. இக்ககல்வெட்டுகளை நன்கு ஆய்வு செய்யும்போது மருத்துவம் மற்றும் நோய்கள் பற்றிய செய்திகளும் கிடைப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது உலகளவில் 'நீரிழிவு' என்னும் சர்க்கரை நோய் மனித இனத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. இந்நோய் பல நூற்றாண்டுகளாக மக்களை மிகவும் துன்புறுத்தி வருகிறது. 700 ஆண்டுகளுக்கு முன்பு கொங்கு நாட்டு ஒரு அரசியல் தலைவன் இந்நோயால் பாதிக்கப்பட்டு இறையருளால் நலம் பெற்ற செய்தியை கோவை மாவட்டக் கடத்தூர் கல்வெட்டால் அறிகிறோம். கொங்கு விக்கிரமசோழன் ஆட்சியின்போது (கி.பி.1302) திருபுவனசிங்கன் என்பவன் கடத்தூர் இறைவன் அருளால் 'பிரமேகம்' என்னும் நோய் நீங்கியதற்காக நிலம் தானமளித்துள்ளான்.

இச்செய்தியினை தெரிவிக்கும் கல்வெட்டு கோவை மாவட்டம், உடுமலை வட்டம் கடத்தூர் மருதீசர் கோயிலில் மகாமண்டபத்தின் கிழக்குச் சுவரின் இடப்புற வாசலில் உள்ளது. இக்கல்வெட்டு கொங்குச் சோழன் விக்கிரம சோழனின் 29-ஆம் ஆட்சியாண்டைச் (கி.பி.1302) சேர்ந்தது. இக்கல்வெட்டு வாசகம் வருமாறு:

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு உயசுூ வ விக்கிரம சோழத் திருபுவன சிங்க
2. னேன் கடற்றூர் ஆளுடையார் திருமருதுடையார் எனக்கு பிரமேகம் தீர்ந்தமையால் இந்நாயனா
3. ர் திருவொத்த சாமத்துக்கு நாள் ஒன்றுக்கு அரிசி குறுணிக்கு நான் நீர் வார்த்து விட்ட நிலமாவது . . . . கன
4. ர வழி நாட்டுக் கண்ணாடி புத்தூர் வடகரையில் உதயாதித்ததேவந் துரைாகியாய் வடகொங்கில். . . .
5. ப்போனமையில் அவந்நிலம் அறுகலமும் எனக்கும் என்தம்பி சோழசிங்க தேவற்கும் இவ்விருவ

6\. . . . . . இக்காணியாக்கினேன் என்று திருமுகம் தந்தமையில் இதில் என்னோ பாதி மன்றாட்டு[1]

கொங்குவிக்கிரம சோழன் ஆட்சியின் போது திரிபுவன சிங்கன் என்பவனுக்கு பிரமேகம்[2] என்ற சர்க்கரை நோய் வந்து கடத்தூர் இறைவன் அருளால் நீங்கியமையும் அதற்காக அவ்விறைவனுக்கு இரவு வழிபாட்டிற்கான அரிசிக்காக இவன் நிலம் தாரைவார்த்துக் கொடுத்துள்ளான்.

இந்நிலம் உதயாதிச்ச சோழன் தேவன் என்பவன் அரசிற்குத் துரோகியாய் மாறியதால் அரசால் கைப்பற்றப்பட்ட நிலமாகும். இந்நிலம் கண்ணாடிப்புத்தூரில் ஆறுகலம் விதைக்கக்கூடிய அளவு பரப்புடையதாகும். மேலும் இந்நிலத்திற்கான எல்லைகளும், வரிவிதிப்பு, வரிச்சலுகை ஆகியவையும் இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளன. இந்நிலம் வீரசிங்கன் மற்றும் அவனது பரம்பரையினருக்கும் அரசால் முழுமையுடன் (விற்றல், ஒற்றிவைத்தல், சீதனமாகக் கொடுத்தல்) கொடையாக அளித்ததாகும். இவ்வெல்லா உரிமைகளையும் சேர்த்து அரசின் ஆணைப்படி (திருமுகதிருவிள்ளம்) இறைவனுக்குக் கொடுத்துள்ளான்.

நமது பண்பாட்டில் மருத்துவர்களால் போக்க இயலாத நோய் மற்றும் குறைகளை இறைவன் போக்குகிறான் என்ற நம்பிக்கை மக்களிடம் மிகுந்து காணப்படுகிறது. இந்நம்பிக்கையின் அடிப்படையில் இறைவன் மனிதர்களின் நோயைப் போக்குவான் என்ற கருத்தில் சில கோயில்களில் இறைவனது பெயர் மருந்தின் அடிப்படையில் உள்ளது. குறிப்பாக திருவான்மியூர் இறைவன் மருந்தீஸ்வரர் என்றும் திருக்கச்சூர் மலைமீதுள்ள இறைவன் மருந்தீஸ்வரர் (ஔஷதீஸ்வரர்) என்றும் அம்மலையை ஔஷகிரி என்று வடமொழிப்படுத்தி அழைப்பது குறிப்பிடத்தக்கதாகும். அப்பர் என்கிற திருநாவுக்கரசரின் சூலைநோய் மருத்துவர்களால் நீக்க இயலாது போய் இறைவன் திருநீற்றால் நீங்கியது என்று இலக்கியக் குறிப்புகளால் அறிகிறோம்.

இடைக்காலத் தமிழகத்தில் நீரிழிவு நோய் இருந்துள்ளதையும், அந்நோய் இறைவன் அருளால் நீங்கியது என்ற செய்தியினையும் கடத்தூர்க் கல்வெட்டு வாயிலாக அறிகிறோம்.

அடிக்குறிப்பு

1. கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி I, பக்கம் 225, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.
2. மேகநோய் என்பது சிறுநீரகம் தொடர்பான நோயென்றும், இருபதுக்கும் மேற்பட்ட மேக நோய்கள் உள்ளதாகவும் சித்தமருத்துவ ஆய்வாளர் கூறுவர் அதில் பிரமேகம் என்பது நீரிழிவு நோயென்றும் அறியப்படுகிறது.

◆✻◆

# 13 சிதம்பரம் ஆடல்வல்லபெருமான் கோயிலில் சோழர்கால எண்ணெய்த் தொட்டி

கோ. முத்துசாமி
காப்பாட்சியர்

பஞ்சபூதத் தலங்களுள் தலையாயதும், புராண காலப் பெருமை உடையதும் சிதம்பரம் ஆடல்வல்லான் பெருமான் திருக்கோயில் ஆகும். இது ஆகாயத் திருத்தலமும் ஆகும். மண்ணும் விண்ணும் இக்கோயிலில் சந்தித்து மகிழ்வதால், "சிதம்பர ரகசியம்" என்ற பெருமையுடன் பேசப்படுகிறது. உலகப் புகழ்பெற்று விளங்கிய சோழப் பேரரசர்களுக்கு இதுவே குலதெய்வம் ஆகும். முதலாம் இராசராசன் இத்தில்லைத் திருத்தலத்தில் பூட்டி வைக்கப்பட்டிருந்த அறையிலிருந்து தேவாரத் திருப்திகங்களை ஓலைச்சுவடிகளில் இருந்து வெளிக் கொண்டு வந்து சைவமும் தமிழும் தழைத்து ஓங்கி வளரச் செய்தருளினான். திரட்டிய பழந்தமிழ் நூல்களைப் புதுப்பித்து மேலும் பலபடிகள் ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்து அங்கேயே ஒரு (நூலகமும்) "கலைமகள் கருவூலமும்", பின்வரும் சந்ததியினர் பயன்பெறும் நோக்கில் அமைத்துத் தந்துள்ளான்.

## கல்தொட்டி கண்டுபிடிப்பு

இவற்றுக்குச் சோழர் பெருமை சேர்க்கும் வகையில் மாமன்னன் முதலாம் இராசராசனுக்குப் பின் வந்த சோழ மன்னர்கள் இத்திருக்கோயிலுக்கு இறைவன் முன்பு எக்காலத்திலும் அணையாவிளக்கு (நந்தாவிளக்கு) எரிவதற்கு நிலக்கொடைகள் வழங்கியுள்ளனர். "சரஸ்வதி பண்டாரம்" எனும் நூல் நிலையத்தில் புலவர்களும், மாணவர்களும் பயில்வதற்கு - அகல்விளக்கு எப்போதும் எரிவதற்குத் தேவையான எண்ணெய் கிடைக்க ஏற்பாடு செய்ததுடன் என்ணெய்யை அளந்து ஊற்றுவதற்கு ஏற்றபடி கருங்கல்லினால் வடிவமைத்த தொட்டியினையும் வழங்கியுள்ளனர். இதற்காகச் சுமார் 150 லிட்டர் கொள்ளளவு உடைய கருங்கல் எண்ணெய்த் தொட்டி ஒன்று கொடை அளிக்கப்பட்டுள்ளது. அது தற்போது திருக்கோயிலின் கீழைக் கோபுரத்திற்கு மேற்கே தீர்த்தக்கிணற்றுக்கு அருகே அதன் சிறப்பும், வரலாற்று முக்கியத்துவமும் அறியப்படாமல் கிடக்கிறது.

அமைப்பு

இந்த எண்ணெய்த் தொட்டி கருங்கல்லில் செதுக்கித் தரப்பட்டுள்ளது. மேலும் கீழும் அரை வட்ட வடிவில் உள்ளது. ஒரு பகுதி விளக்கிலிருந்து வரும் சுடர் போல் சற்று கூம்பியுள்ளது. அதன் எதிர்ப்பக்கம் தட்டையாகவும் அதன் நடுவில் எண்ணெய் தேவைப்படும்போது வெளியே எடுப்பதற்கு ஏற்றபடி 2 அங்குலம் அளவுள்ள ஒரு ஓட்டையும் காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| இதன் வெளி உயரம் | - | 2 அடி |
| உள் ஆழம் | - | 1 1/2 அடி |
| 4 பக்கம் தொட்டி சுவர் கனம் | - | 5 அங்குலம் |
| தொட்டியின் கொள்ளவு சுமார் | - | 150 லிட்டர் |
| நீளம் (பக்கவாட்டில்) | - | 2 1/4 அடி |

கல்வெட்டு

இத்தொட்டியில் சோழர் கால எழுத்தமைதியில் கல்வெட்டும் காணப்படுகிறது. டிதாட்டி வெளியே கிடப்பதால் வெய்யிலிலும், மழையிலும் பொறிந்து கல்வெட்டு சிதைந்துள்ளது. அதில் "ஸ்வஸ்திஸ்ரீ தில்லைக்கூத்தன்" என்று எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளது படிக்கப்பட்டது. எனவே ஆர்வலர்கள் கல்வி பயிலவும், இறைவனின் திருக்காட்சி மக்களுக்குக் கிடைக்கவும் எப்போதும் விளக்கொளி கிடைக்க மன்னர்களும், பக்தர்களும் இத்தொட்டியில் எண்ணெயைத் தானமாக வழங்கியுள்ளனர் என்பதும் தெரிகிறது. இது முதலாம் இராசேந்திர சோழன் காலமாகக் கருதப்படுகிறது. சிதம்பரம் என்ற பெயர் கல்வெட்டில் "தில்லை" என்று குறிப்பிட்டுள்ளதும் தெரிய வருகிறது. இறைவன் பெயர் "கூத்தன்" என்று வருகிறது.

இதுபோல் (1) லால்குடி வட்டம் - ஊட்டத்தூர் சிவன்கோயில் (2) லால்குடி, வட்டம் - சப்தரிஷீஸ்வரர் கோயில் (3) திருப்பெருந்துறை, வட்டம் - ஆவுடையார் கோயில் போன்ற இடங்களில் இதுபோலத் தொன்மையான எண்ணெய்த் தொட்டிகள் இருப்பது ஆய்வாளரால் ஏற்கெனவே கண்டறியப்பட்டுள்ளன.

◆✱◆

# 14 கருவூர் வஞ்சிவேள் கல்வெட்டு

நாக. கணேசன்
காப்பாட்சியர், கரூர்.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம் கரூர்-மதுரை தேசிய நெடுஞ்சாலையின் மேல்புறம் கரூரிலிருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சிற்றூர் செங்காளிப்பாளையம், அமராவதி (ஆன்பொருநை) ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள இவ்வூரில் 20 ஏக்கர் பரப்பளவில் "நத்த மேடு" என்றழைக்கப்படும் வரலாற்றுக் கால மக்களின் வாழ்விடப் பகுதியில் சிவன் கோயிலொன்றும், பெருமாள் கோயிலொன்றும், சிதைந்த நிலையில் உள்ளன. சிவன் கோயிலில் செவ்வக வடிவிலான தனிக்கல்லின் ஒரு பக்கத்தில் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. தமிழும் கிரந்தமும் கலந்த எழுத்து வரி வடிவில் 13 வரிகளில் கல்வெட்டு காணப்படுகின்றது. பத்து வரிகளில் தானம் பற்றிய செய்தியும் இறுதியாகவுள்ள மூன்று வரிகளில் வடமொழி வாழ்த்து சுலோகமும் காணப்படுகின்றது.

கல்வெட்டு

1. ஸ்ரீதென்னவன் வஞ்சி வேளாஇன
2. இரவி குவாவன் மணவாட்டி
3. நிறந்தேவி வஞ்சி வேளார்கேய்
4. ஐம்பது பொன் குடுத்துப் பு
5. துப் பெருவாய்க் கீழ்க்குடையூர் மூ
6. ருக்கத் தரைக் கடறு சாற்றிய காற் செய்யு
7. ம் விலைக்குக் கொண்டிவ்வூர் திரு மூ
8. லட்டானத்து மாதேவர்க்கு ஒரு நொந்தா வி
9. ளக்கினுக்குந் திருவமிர்தினுக்குமாகக் கு
10. டுத்தாள் நிறந்தேவி பந்மாஹேஸ்வரர் காவல்
11. *வாஉ நிரவஜ நஸூாஉாச்ு:"ஜூ மராமெ வி*
12. *நாகிரெ வநஜி வூஷெண மஉரஹா ஹஸூ ஷெ*
13. *வி ஷெவிதி கீத்திதா ஸூஷ்தி*

இக்கல்வெட்டில், ஸ்ரீதென்னவன் வஞ்சிவேள் இரவிகுவான் என்பவனின் மனைவி நிறந்தேவி என்பவள் தன் கணவரிடமே ஐம்பது பொன் கொடுத்து விலைக்கு நிலம் பெற்று அந்நிலத்தினை கீழ்க்குடையூர் சிவன் கோயில் மகாதேவர்க்கு (ஈசுவரன்) நொந்தாவிளக்கெரிப்பதற்காகவும், திருவமிர்து படைப்பதற்காகவும் தானமாக வழங்கிய செய்தி பொறிக்கப்பட்டுள்ளது.

கரூர் கி.பி.முதல் நூற்றாண்டிலிருந்தே முதல் "கருவூர்" என்றும் "வஞ்சி" என்றும் அழைக்கப்பட்டுள்ளது. "கருவூர் பொன் வாணிகன் நத்தி அதிட்டானம்" என்ற புகழிமலைத் தமிழி (தமிழ்-பிராமி) கல்வெட்டிலிருந்தும், "ரவிகோகலியன் மவந் கருவூரிடை தந்நாநிரை கொளல் எறிந்துப்பட்டான்" என்ற கரூர் நடுகல் கல்வெட்டிலிருந்தும் "வஞ்சி ஸ்ரீவைஷ்ணவரோம்" என்ற கரூர் பெருமாள் கோயில், கல்வெட்டிலிருந்தும், "ஸ்ரீ வஞ்சி வேளடியான்" என்ற கரூர் நடுகல் கல்வெட்டிலிருந்தும் "வஞ்சி மாநகரான கருவூர்" என்ற நெரூர் பெருமாள் கோயில், கரூர் பசுபதீஸ்வரர் கோயில் கல்வெட்டிலிருந்தும் "வஞ்சிப் புறமதில் அலைக்கும் கல்லென் பொருநை" என்ற புறநானூற்று வரிகளிலிருந்தும், "ஆன்பொருநை சூழ்தரும் வஞ்சியார் கோமான்" - என்ற சிலப்பதிகார வரிகளிலிருந்தும் இன்றைய கரூர் பண்டைய காலங்களில் "கருவூர்" என்றும் "வஞ்சி" என்றும் வழங்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

வஞ்சி என்பது கருவூரை குறிக்கும். வேள் என்பதற்கு ஒளி பொருந்திய மன்னன் அல்லது வேளிர் குல மன்னன் (தலைவன்) என்று பொருள் கொள்ளலாம். வஞ்சி வேள் என்பது வஞ்சிநகரை ஆண்ட வேளிர்குல மன்னன் என்று பொருள்படும். வஞ்சிமாநகரான கரூர் சிலகாலம் வேளிர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. வஞ்சியை ஆண்ட அவ்வேளிர் "வஞ்சிவேள்" - என்று அழைக்கப்பட்டனர். "வஞ்சிவேள்" ஆட்சியில் மன்னனின் அடியவனொருவன் மன்னனுக்காகப் போரிட்டு இறந்துள்ளான். அவ்வடியனுக்காக எடுக்கப்பட்ட வீரக்கல்லொன்று கரூர் நகரில் காணப்படுகின்றது. அந்நடுக்கல்லில் புடைச் சிற்பமாகக் காணப்படும் வீரனுக்கருகில் "ஸ்ரீ வஞ்சிவேளடியான்" என்ற தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டு கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். வஞ்சி நகரை ஆண்ட மன்னனின் பெயர் அக்கல்வெட்டில் பொறிக்கப்படவில்லை. "வஞ்சிவேள்" பற்றிய முதல் கல்வெட்டாக அக்கல்வெட்டு கருவூர் (வஞ்சி) நகரில் கண்டறியப்பட்டது.

செங்காளிப்பாளைத்தில் கண்டறியப்பட்ட "வஞ்சிவேள்" கல்வெட்டு இரண்டாவது கண்டுப்பிடிப்பாகும். அக்கல்வெட்டும் கி.பி.9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்தமைதியில் காணப்படுகின்றது. அக்கல்வெட்டின் தொடக்கத்தில் ''ஸ்ரீதென்னவன் வஞ்சி வேளாஇன இரவி குவாவன்'' என்று பொறிக்கப்படடுள்ளது. . கல்வெட்டில் வஞ்சிவேள்-மன்னனின் பெயர் "இரவி குவாவன் காலத்தைச் சேர்ந்ததெனக் கொள்ளலாம். வஞ்சிவேள் மன்னன் இரவி குவாவனின் அடியவனுக்காக எடுக்கப்பட்ட வீரக்கல்லே கரூர் நகரில் காணப்படும் வஞ்சிவேளடியான் நடுகல் என்பதை செங்காளிப்பாளையம் வஞ்சிவேள் கல்வெட்டின் மூலம் உறுதிப்படுத்தலாம்.

இங்குள்ள நத்தமேட்டில் கண்டறியப்பட்ட சிவப்பு மற்றும் கருப்பு சிவப்பு மட்பாண்டங்கள், இரும்புக் கசடுகள், செக்குகள் போன்ற தொல்லியல் சான்றுகள் மூலம் - கி.பி.முதல் நூற்றாண்டில், செங்காளிப்பாளையம் பகுதியில் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்துள்ளதை அறியலாம். அதனை தொடர்ந்து கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ தென்னவன் வஞ்சிவேள் இரவி குவாவன் என்பவன் இப்பகுதியில் குறுநில மன்னனாக ஆட்சி செய்துள்ளான் என்பதும், அம்மன்னனின் மனைவி நிறந்தேவி என்பவள் கீழ்க்குடையூர் சிவன் கோயிலுக்குக் கொடையளித்துள்ளாள் என்பதும், கரூர் நகரில் கண்டறியப்பட்ட கல்வெட்டுப் பொறிப்புடன் காணப்படும் வீரனின் நடுகல் சிற்பம் இவ்வஞ்சிவேள் இரவிகுவாவனின் அடியவனுக்காக எடுக்கப்பட்ட வீரக்கல் என்பதும் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட செங்காளிப்பாளையம் வஞ்சிவேள் கல்வெட்டின் மூலம் அறியப்படும் புதிய செய்தியாகும்.

◆⋊◆

# 15 பனைப்பாடி சோழர்கால மகாவீரர் சிற்பம்

இரா. சிவானந்தம்
கல்வெட்டாய்வாளர்

விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், திருக்கோயிலூரிலிருந்து உளுந்தூர்பேட்டைச் செல்லும் சாலையில் ஜி.அரியூரிலிருந்து 5கி.மீ தொலைவில் பனைப்பாடி என்ற சிற்றூர் அமைந்துள்ளது. சோழபாண்டியபுரம் என்னும் ஊரின் வழியாக இவ்வூருக்குச் செல்ல வேண்டும். பனைப்பாடி ஏரிக்கரையில் உள்ள சிறிய மாரியம்மன் கோயிலுக்கு எதிரே அமைந்துள்ள குன்றின் முகப்பில் மகாவீரர் சிற்பம் எழிலுடன் காணப்படுகிறது. மகாவீரர் பீடத்தின் மீது கைகளை தியான முத்திரையில் வைத்து தியான நிலையில் அமர்ந்து காட்சியளிக்கிறார். பின்புறம் திண்டு காணப்படுகிறது. தலையில் சுருண்ட முடியும் காதுகள் தொள்ளைக்காதுகளாகவும் உள்ளன. மூக்கு சேதமடைந்து காணப்படுகிறது. தலைக்கு மேல் முக்குடையும், பின்னால் அரைவட்ட பிரபையும் அலங்கரிக்கின்றன. தோளுக்கருகே சாமரம் வீசுபவர்கள் சாமரத்துடன் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளனர்.இரு புறமும் உள்ள யாளிகளில் இடது புறம் உள்ளது நல்ல நிலையிலும் வலது புறம் உள்ளது சிதைந்தும் காணப்படுகின்றன. மகாவீரர் அமர்ந்துள்ள பீடத்தில் அவரின் இலச்சினையான சிம்மம் காணப்படுகிறது. இந்த மகாவீரரின் அமைதியான முகஅமைப்பு மற்றும் உருவ அமைதியைக் கொண்டு இச்சிற்பம் கி.பி. 10--ஆம் நூற்றாண்டுச் சோழர் கலைப்பாணி என்பதை பறைசாற்றுகின்றது.

இவ்வூருக்கு அருகே உள்ள சோழபாண்டியபுரம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் சிறந்த சமணத்தலமாக விளங்கியுள்ளது. இதனை இவ்வூருக்கருகில் ஆண்டிமலை என்னும் குன்றில் ஆதிநாதர், மகாவீரர், பார்ஸ்வநாதர், கொமடேஸ்வரர், பத்மாவதி ஆகிய சமண உருவங்கள் மற்றும் இங்குள்ள குகைத்தளங்களில் 20க்கும் மேற்பட்ட படுக்கைகள் காணப்படுவதன் வாயிலாக அறியமுடிகிறது. இச்சிற்பங்களை ஸ்ரீவேலி கொங்கரையர் புத்தடிகள் என்பவர் செய்வித்ததை இங்குள்ள கல்வெட்டொன்று தெரிவிக்கிறது.[1] மற்றொரு கல்வெட்டு பாடல் வடிவிலாலனது.[2] இக்கல்வெட்டு கண்டராதித்த சோழனது 2-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 952) இப்பகுதியின் சிற்றரசன் சித்தவடவன் என்னும் சேதிராயன் இங்குள்ள சமண இறை உருவங்களின் வழிபாட்டிற்காக, பனைப்பாடி என்ற ஊரினைத் தானமாக அளித்த செய்தியைக் கூறுகிறது.[3]

இவ்வூர்க் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்ற பனைப்பாடியில் சமண சமயத் தொடர்பான சான்றுகள் எதுவும் கண்டறியப்படாத நிலையில் தற்போது 24-ஆவது தீர்த்தங்கரரான மகாவீரரின் அரிய சிற்பம் கண்டறியப்பட்டது.[4]

அடிக்குறிப்புகள்:

1. எபிகிராபியா இண்டிகா 29 பக். 199.
2. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1936-37 எண். 252
3. ஏகாம்பரநாதன், ஏ. "சோழர் ஆட்சியில் *சமணசமய* வளர்ச்சி" ஜைன ஆய்வியல் கழகம் 1998, சென்னை .பக். 239-241
4. தொல்லியல் துறை ஆணையர் முனைவர் க. அருள்மொழி, இஆப, அவர்கள் ஆணைக்கிணங்கத் துறையின் சிறப்புநிலைக் கல்வெட்டாய்வாளர் திருமதி. அர. வசந்தகல்யாணி அவர்களின் வழிகாட்டுதலின்படி கல்வெட்டுப் படியெடுக்கும் பணி மேற்கொண்டபோது இக்கட்டுரை ஆசிரியரால் கண்டறியப்பட்டது

◆◆◆◆

# 16 MALAIPATTU-A PRE-HISTORIC SITE

**S. SREEKUMAR**
*Technical Assistant*

The village malaipattu, situated at 45 km. from Chennai, is on the Tambaram-Tiruvellore route via Mudichur and Manimangalam. On the southern side of this village a hillock with green cover which consists of shrub plant viz Thirukalli, etc., is located. The resrerved forest on this hillock is known as Maganiam reserved forest. This village is fringed all around by a large tank. Fox, Snakes and Porcupine are known faunas survice here. Irular and oddar community people inhabit this village. Malaipattu comes under the jurisdiction of Sriperumpudur Taluk. Kanchipuram District.

In the course of exploration in the odai of Malaipattu, the occurrences of Upper Palaeolithic tools were noticed. The collection of antiquities includes hand axe and discoid. One of the implements exhibits good workmanship with faces so worked to resembles sliced butter by a knife. Since the cutting faces and edges are perfect, these stone tools are identified as *insitu.* These implements are made of Quartzite rock. In addition to finding of implements, Megalithic appendages namely Black & Red ware pieces, Urn pieces and Iron objects were also traced. It is interesting to mention the presence of Sarcophagus, Cist, and Urn burial sites of megalithic period here. And, it is understood that the occurrences of Terracotta pipes (Tuyeres) for smelting purpose are also available here.

The country rock of this village is granite which is quarried here for the purpose of laying road. Availability of quartzite rock, quartz pieces and Chert piece throw light on the existence of veins of these rocks in this hillock. The pre-historic men of Malaipattu used small size quartzite hand axes and micro tools, presumably arrowhead (chert) for hunting animals. Hence, it is ascertained that transition of Palaeolithic and

Mesolithic culture might have existed here.

Besides this, a brick from a mound, called Perumalmedu was found. It is datable to 7th century CE. And, a Visnu sculpture without head of Vijayanagara period was also noticed at Malaipattu village. Geologically, Sriperumpudur area is known for Gondwana formation composed mainly of white to pink clays, shales with leaf fossils and feldspathic sandstone. The occurrences of leaf fossils are found from the basins of Gunduperumpudur and Navalur village, close to Malaipattu.

The megalithic Cist burial and Cairn Circle of Malaipattu are protected as mounment by the Archaeological Survey of India, Government of India. On the basis of finding of small size quartzite tools, core sample of Chert on exploration and the presence of Megalithic burial sites throw light that the inhabitation at Malaipattu might have started from Upper Palaeolithic Period.

◆◆◆◆

**17**

# பழனிச் செப்பேடுகள்

ச. கிருஷ்ணமூர்த்தி,
தொல்லியல்அலுவலர் (ஓய்வு)

தமிழகத்தில் காணப்படுகின்ற கல்வெட்டுகளில் சிலவற்றில் பாடல் கல்வெட்டுகள் இருப்பதுபோல் சில செப்பேடுகளிலும் பாடல்கள் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சேகரித்து வைத்துள்ள செப்பேடுகளில் பழனிச் செப்பேடு என்ற செப்பேட்டில் சில பாடல்கள உள்ளன. முருகப்பெருமானைப் போற்றியும், வேளாளர் சிறப்புகளையும் அப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. எளிய நடையில் உள்ள பாடல்கள் என்பதால் உரை தேவையில்லை என்று கருதுகிறேன்.

1. வைய(ம்) நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்கு
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

2. கருணைபொழி திருமுகங்க ளாறும் வாழி
கரமலர்ப் பன்னிரு கைவேலும் வாழி
இருசரண மென்றலை மேல்நாளு மோங்கயிந்
திரவிக்கப் பாலு மினிது வாழி.

3. அருள்பவர் அமரர் சிறைமீட்டே யாண்ட ஆறிரண்டு
திருநயனத் தழகும் வாழி மருவணியும் பைங்கடப்பந்தாகுமயில்
பரிசேவற் கொடியும் வாழிஅடைந்தவர் துணைவர்வாழி மாதவன்
மருகர் வாழி திடம்புனை வேலர்வாழி தேவாயிரேவாழி.

4. போர்பூட்டுஞ் சிலைகாமன் பொருசிலை மேற்சரம் பூட்டான்
பார்பூட்டுந் திசையனைத்தும் பகடுகளி லத்திரம் பூட்டான்
கார்பூட்டும் பெருக்காளர் காவேரி நன்னாடர்
ஏர்பூட்டில் அதுமற் றிரவியுந் தேர்பூட்டான்

5. குடையாளு முடிவேந்தர் கொலையானை தேர்புரவி
படையாளும் பெருஞ்செல்வம் படைத்துடையரானாலும்
மடவாளைக் குதிகொள்ள வரும்பொன்னி வளநாடர்
படைவாளைக் கொண்டின்றி பகையறுக்கமாட்டாரே.

6. பாராலு மழையாலும் பயிராக்கி உயிர்வளர்க்கும்
பேராளர் தம்மாலே பிறருடைய பெருமை யெல்லாம்
ஏரா லெண்டிசை வளர்க்கும் ஏய்க்கவள நாட்டு
காராளர் பெருமையெல்லாம் கண்ணாளர் கைத்தொழிலே

7. வெங்கோபக் கலிகடந்த வேளாளர் வினைவயலு
பைங்கோல் முடித்திருந்தப் பார்வேந்தர் முடிதிருத்தும்
பொங்கோதக் களிற்றானைப் போர்வேந்தர் நடத்துகின்ற
செங்கோலுக் கூற்றங் கோலோட்டும் சிறுகோலே.

8. கார்நடக் கும்படி நடக்கும் காராளர் தம்முடைய
ஏர்நடக் கும்படி நடக்கும் இயலிசை நாடகம் நடத்தும்
சீர்நடத் தும்புகழ் நடத்தும் திருவாரத்தின் செயல்நடத்தும்
பார்நடத் தும்படி நடத்தும் பாநடத்த மாட்டாரே.

9. தடுத்த திரையாலுந் தடவரைக ளெட்டாலும்
முடுத்த திரைக்கடலில் முடைய பெரு வலியாலும்
எடுத்த புகழ்பெருக் காளர் எழுநுகத்தின் துடைநனைய
தொடுத்த படிநெகி ழாமல் தொல்லுலகில் வளர்ந்திடுமே.

10. மன்னிய வேளான் தொன்மை இராசமாறன்
வறுமையினால் உண்ணுணர்வு மறந்து வைகை
உன்னிருள் நள்ளிருளில் மழையிருண்டி வேண்டி
உம்பர்பிரான் என்வயலுக் களித்த
சென்னெல் வித்தையமுது மனையகலாக்கிச்
சிறுபயத்தின் கறியமுது திருந்தச் செய்து
பன்னவரும் உரைவருந்தற் கெழுந்த சோதி
பரலோகம் இனிதாண்ட பான்மையாரே.

(இளையான்குடி நாயனார் வரலாறு இதில் உள்ளது)

11. தாவிகண மங்கலத்தில் வேளான் தொன்மை
தாயனூர் நாயனார் தமக்குச் செந்நெல்
தூவரசி மாவடுவு துணங்கு கீரை
துடர்ந்துணர்வு எனவயவு தகையே யாகி-
ஆவுநிலை துடர்ந்துணர்வு கமரி சிந்த
அறிந்தரு வாள்பூட்டி ஒட்டி அறிவற்முன்னே
மாமடுவு னொலியு மாநகருந் தோன்றி
வாழ விலக்கிய மாதோ வைத்த தன்றோ.

மேற்படி பாடல்களில் சில பாடல்கள் ஆய்வாளர்கள் அறிந்திருக்கலாம். இங்குள்ள பாடல்களில் சில எழுத்துப் பிழைகள் உள்ளன. காரணம் செப்பேட்டில் உள்ளவாறே இங்கே பதிப்பிக்கப்பட்டுள்ளன.

◆◆◆◆

# 18 ஒன்பது கம்பளத்து நாயக்கர் செப்பேடு

இரா. ஜெகதீசன்
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

இச்செப்பேடு செயவருடம் சித்திரை மாதம் 15ந் தேதி எழுதப்பட்டுள்ளது. (18-ஆம் நூற்றாண்டாகக் கருதலாம்.) இதில் இரு நிகழ்ச்சிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மாறி மாறிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒன்பது கம்பளத்து நாயக்கர்கள் தெய்வராயருக்கு உதவியாக டில்லி சுல்தானின் பிரதிநிதியைத் தோற்கடித்ததற்காகப் பல ஊர்களில் காணியாட்சி உரிமையையும், பல வரிச்சலுகைகளையும் பெற்றுள்ளது பற்றிக் குறிப்பிடுகின்றது. மேலும் இச்சமூகத்தைச் சேர்ந்த சின்னக்கன்னம்ம நாயக்கனின் தொண்டுள்ளத்தையும், வீரத்தையும் பாராட்டி அவனுக்கு "சுருகன்" என்ற பட்டத்தையும், "பணங்கரச்சில்லக் கன்னம்ம நாயக்கன்" என்ற சிறப்புப் பெயரையும் சூட்டி சமூகத்தில் சில சிறப்பு மரியாதைகளையும் இவனுக்கும், இவனது மாட்டிற்கும் கொடுத்தது பற்றிக் குறிப்பிடுகின்றது.

இச்செப்பேடு மொத்தம் ஐந்து ஏடுகளாக உள்ளன. இவை 21 செ.மீ. நீளத்தையும், 10.5 செ.மீ. அகலத்தையும் பெற்றுள்ளன. ஒவ்வொரு ஏட்டின் எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளன. (நான்காம் ஏட்டிற்கு மட்டும் இல்லை). இந்த ஏடுகள் தற்போது கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம் பொட்டையம்பாளையத்தைச் சேர்ந்த பொம்ம நாயக்கர் மகன் ஆறுமுகம் என்பவரிடம் உள்ளன.

## மூலம்

### ஏடு-1 - முன்பக்கம்

1. செய வருடம் சித்திரை மாதம் 15ம் தேதி திறெத்தி இருந்து வரப
2.. ர் கலியுகம் நாலுகங்களிலும் இந்திரலோகம் சந்தி
3. ரலோகம் மகாலோக சறுவ பிராணிகளையும் லட்
4. சித்தருளும் படிக்கு இந்தப் பட்டையத்தில் உள்ள வி
5. பரம் சுகத்திரியும் மகாமண்டலெசுபரன் அரி
6.. யதழ விபாடன் பாசைக்குத் தப்பு வாராத கண்ட

7. ன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடா
8. தான் துலுக்க தழவிபாடன் துலுக்கர் முகத்த வில்
9. த்தான் ஒட்டியர்கள் விபாடன் ஒட்டியர் முகந்த
10. வில்த்தான் இளந்திரை கொண்ட இந்திர சுரத
11. ா மன் மதியாத மன்னர் மணவாளன் கெடி
12. துலுக்கர் சுரதாழன் திறிபுவன வில்லம புசமு
13. தாடு பட்டர் வுகையில் கொண்டாடிய சுர
14. தாழன் மேதினி மீசுரர் கண்டன் இந்து தெ
15. கேட்டெனென்பவருக்கு கண்டன் கொட்டுக்
16. ாட்டே நாளைக்குத் தொட்டேனென்பவறா
17. க் கண்டன் கரிய கெடியோள் கெவினிய சூ
18. மூடமுண்டு எதிரி சுவருக் கண்டன் ஆசுமனை

## பின்பக்கம்

19. யொள் கெ சூ சுமுத தெத்தாடி தப்பி ஓடியே
20. ா வரு கண்டன் தொத்துக் கொந்து சாமு கெண்
21. ணுக் கொந்துசூறு அட்டுவருக் கண்டன் தாணி
22. வில் வாளவு பகார் சந்தியவாச ஏன விசதகா
23. காபாலாணா அதூரன ராயர் வெற்றிப்பிந்த
24. ா பாா்யர் இராங்கெச ராயர் தெய்வராயர் சிங்க
25. ாசானத்தில் மீதே பிறிதிவிராயர் ராச்சிய பாற
26. ம் பண்ணி அருளகினந் காலத்தில் இசுடாபுத்தி
27. ரன் உத்திரா உத்தினவர்கள் உடப்பிறப்பு நெத்தி
28. க்கன்னி மகன் கன்னியாழன் கன்னியாழன் ம
29. கன் சங்குபாலன் செகசிவனும் சினகாலன் மகன் சி
30. று பெரிய கன்னி மகன் தொரணிக் கோட்டைப்
31. பொம்மன் தும்மலனாயக்கன் தும்மலுனாயக்கன் ம
32. கன் யொவளி நாயா சிக்காநன் தொளுவிலே சிப்பிலி செ
33. பாசன் வந்து பட்டி குத்திப் போகையிலே சில்லக்க
34. ன்னமனான் நின்று மீட்டு அவனைக் கையில் பவி

35. டித்து வில்லுக்குள் வணாழயச் சொல்லி நிரை
36. மீட்டான் பெரியளுபழ ணாயக்கன் சின்

## ஏடு-2 - முன்பக்கம்

1. னப் பொம்மனும் இரணகிரிக் கோட்டைச் சுகிற
2. என்னுகிற துலுக்கனை வில்லினால்க் கண்ணைக்
3. குத்தி சந்திர காவிப் பாவாடை கொண்டு வந்தெ
4. தன் கொடீளியூர் சின்னப் பொம்மனையும் சுண்
5. டைக் காண் கல்லன் மகனையும் சில்லக் கண்ணமனா
6. ன் தன் கையில் அகப்படுத்தி சுருகனென்கிற
7. விருது வாங்கினான்-சிமது துலு ஏகாபதி வாளும்
8. மசுரதாளி கண்டன் ராசாக்கள் பெருமாள்
9. சதகெதிராயன் தொட்டி மடுடையனாப எ
10. டு பாளையத்திலிருக்கும் தாதனாதப் பல்லையவ
11. ாற்கு கெடி கொண்ட பாலன் நகரிலகா மனாயக்
12. கன் வல்லேற் பொம்மனும் குந்திலிக் கெங்க
13. னாயக்கனும் சில்லலிங்கமனான வசவனுக்கும் த
14. ாதனாதப் பல்லையனாயக்கன் வசவனுக்கும் இந்தர
15. ண்டு யெருதுக்கும் தெய்வராயர் மெச்சி நெத்திக்கு
16. முத்துப் பாவாடையும் பொன் குஞ்சும் காலுக்குவென்
17. டையமும் விருது சிங்காரம் பண்ணிக் கும்பிட்
18. டோம் இவர்கள் கட்டி இ பொன் வரி புல வரி

## பின்பக்கம்

19. மொண்டி வரி முஞ்கரை வரி இல்லை யென்று கட்ட
20. ளை இட்டுப் பட்டையம் யெளுதிக் குடுத்தோம் இதுக்
21. கு யாதாமொருத்தன் இகட்சி செய்தாலும் கெ
22. ங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பா
23. வத்திலே போவார்கள் இந்தப்பட்டையம் யெ
24. ளு திணைவன் ராசவெங்கிட்டய்யன் எளுதிக்குடு
25. த்த பட்டையம் கட்டிக் கொள்ளவும் உ சிவமத்த

26. லுக் காணி பூமி சிகிட்டிக் கொண்ட மாப பிட்
27. டி நிட சிவல வத்தவக் காணி பூமிச் சந்திரகிரித்
28. துருவம் குறி பொத்தலுக் காணி பூமி கொடிலுக் கொ
29. ண்ட கொடுகுமாரி இரமாசி சினப்பொம்மு காணி
30. பூமிராய கிரித துருவம் இரிகொப்பு காணி யாச்
31. சி துங்கபத்திரி வைடார் சிபாலமணாயக்கன்
32. யாச தீபாமலுக் கொண்ட துருகம காணிய குச்சுப்பொம்மு க
33. ாணியாச்சி சுத்தராளுலு கவலர் அலக் கொண்ட
34. கம பார்சு காணியாச்சி சென்னபட்டணம் சிர
35. ங்கம நாவரர் மு காணி பூமி மேலூரு உடையூருவ
36. வலக்க நாட்டோக்குமராடு காணி பூமி யெற்றி
37. சறலு யெடு நெதம

## ஏடு-3 - முன்பக்கம்

1. தாலு கொடைக்கானி பொம்மு காணி பூமி
2. அக்க சிந்தலு முக்காமுடிலு மங்கை ராசு க .
3. ாணி பூமி அத்தி மாக்கலு ஆவுல தொட்டிவ
4. ன்னலு கோட்டைத் துலுக்கர் தேவராய ராயமி மக
5. ளைப் பன்னிரண்டு உப்பரிகை மேடை மேலே இரு
6. க்கிற சேதி கேட்டு டில்லித் தலுக்கன் அவளைக் கொ
7. ள்ள வேணுமென்று முத்தாலே பாசிங்கம் கட்டிச்
8. சிம்மத் தாலாட்டம் முகத்துக்கு கண்ணாடி சந்திரக
9. ாவில் பாவாடை சந்திர காவிடாலுங் வலது கை
10. யில்க் கங்கணம் வாடாத மாலை சல்லிச வாம சாம
11. த் துரொகர் வெண்டைவது இதுவெல்லாம் போட்
12. டுக் கொண்டு தெய்வராயர் மகளைக் கொடுக்கச் சொல்லி
13. வாறானென கிற சேதி கேட்டு தெய்வராயர் ஒன்பது பேற்
14. கம்பழத்தை அளைத்து அவனவனுடன் வந்தத் துலுக்கனை
15. வெட்டிச் செயித்து அவனவனெடுத்த விருது அவன
16. வனு செல்லுமென்று கட்டளை இட்டார்கள் ஒன்ப

17. து கம்பளமுங் கூடி ராயல் மின்னல் கோட்டை மேலே
18. ல போய் டில்லித் துலுக்கனை வெட்டி ஒன்பது கம்பழ
19. மும் விருது கம்பழம் விருதுகள் எடுத்தார்கள் சி
20. ல்லக்கன்மை னாய்க்கனு நக்கு செல்லும் விருது ச
21. ந்திர காவிப் பாவாடை சந்திரகாவிடாலும் வாடா

## பின்பக்கம்

22. மாலை சாமத் துரோகர் வெண்டையம் முத்தாலு பாவான
23. ட பூச்சிக்குராடை உ காப்பிவித்தொண்டு ரக கூளன்நம்பி
24. டகுதிரை முந்தினைதே அல்லாமல் எரு முந்தினதல்லெ
25. வன்று வாக்குத் தத்துவமான படியினாலே இரத்த காப்பி
26. லியன் அப்படிச் சொன்னபடியினாலே ஒன்பது கம்ப
27. ளமுந் கூடிப் பாலமனான பாமுலக்கொண்ட துருகத்
28. துக்கிட்ட மூணு யக்த மாசத்தி பொதி போட்டு ஒன்பது கப
29. ளத்தையும் அனைச்சு யோசித்து சிவபத்தலு மாட்டை
30. யும் சில்லலிங்கமனான மாட்டையும் தருவிச்சு ஒ
31. ன்பது கம்பழமும் இரு வகை மாட்டுக்கும் சமான் உ
32. பாதிக் கொம்பு நட்டுக் குடுத்து ஒன்பது கம்பளத்து
33. மாடுங்கூடி மாடு சேசைக்கு விட்ட விடத்தில் கா
34. ப்பிலிக் கூழன் தானுங் சரியாய்ப்பிடித்து குதிரை
35. விட்ட விடத்தில் காப்பிலிக கூளன் குதிரை பின்னி
36. ட்டுப் பொசகது சிவபத்தலு மாடு வெள்ளை யெருதும் சி
37. ல்ல லிங்கமனாயக்கன் வெள்ளை யெருதும் சேசைக்கு
38. யறிச்சு சேசையெறின யெருது ரண்டுக்கும் க
39. ாப்பிலிக் கூளனையும் அவன் குதிரையும் வெ
40. வட்டி அந்தக் குதிரை மேலே இருந்த சல்லி சவ
41. ாத்தையும் முகத்துக் கண்ணாடியும் இந்ததி
42. முத்துப் பாவாடையும் பிடிங்கி எருது ரண்டுக்
43. கு காலுக்கு வெண்டையமும் போட்டு ஒன்பஎ

## ஏடு-4 - முன் பக்கம்

1. பது கம்பளமும் சாசான பொதிக் கொம்பு இந்த விருது
2. யெண்ணைக்கு சிவபத்தனுக்குஞ் சில்லங்கதலுக்குஞ் செ
3. ல்லுமென்று தீத்து இந்த விருது கல்லுங் காவேரியு
4. ம் உள்ள மட்டும் செல்லும மென்று ஒன்பது கம்பளமுந்த்
5. தீர்த்து விட்டார்கள் தொண்டுரக கூழன் பொன் முண்
6. டகிரிப் பொம்மன் நம்பிட பளிய கேக்க வேணுமென்று
7. று ராயர் சமூகத்திலே விருது காலில் வாரி போட்டு கெ
8. ாண்டு ஆதாமொருவன் நம்பிட காலு வாரி கடந்தவ
9. ன் அவனே யெதிராளியென்று இருந்தான் சில்லமை
10. கன்னமனான் ராயர் சமூகத்து இமளைத் தண்ணீ
11. ர் ஒரு கும்பம் சொனைத் தண்ணீர் ஒரு கும்பம் பனித்
12. தண்ணீர் ஒரு கும்பம் இந்த மூணு கும்பத்தையு
13. ம் அரக்கு முந்திரி போட்டு ராயர் சமூகத்திற்கு கொ
14. ண்டு போற போது முண்டகிரி பொம்மன் காலெ யா
15. ரி கடந்து போய் ராயர் சமூகத்திலு வைத்த விடத்தில்
16. ராயர் இல்லன் கன்னமனாயக்கனை யென்ன உ
17. லுப்பையென்று கேட்டவிடத்தில் சில்லக்கன்மை
18. னாயக்கன் சொன்ன வயனம் சாமி யென்ன வெ
19. ன்று முத்திரி உடைத்துப் பாருங்கோவென்று சொ
20. ன் னான் அப்பாச்சி வந்து பார்த்து இந்தச் சில்லக்ககன்
21. ன் னமனாயக்கனை இருவென்ன உலுப்பை யென்
22. று கேட்டான் அப்பாச்சி சொன்ன வயனம் மூணு கும்
23. பத்தையும் பாத்து தண்ணீரென்று சொன்னான் அ
24. ப்பாசியர் பாத்து.

## பின்பக்கம்

25. மூணு கும்பந் தண்ணீர் கொண்டு வந்ததென்ன வெ
26. ன்று கேட்டான் அப்பச் சில்லக்கனமனான் சொன்ன வ
27. யனம் சுவாமி சொனைப் பூமியிலே பட்டி போட்டு சொனை
28. த் தண்ணீர் ஒரு கும்பம் புலிச் சொடிம்மைப் பூமியில்ப்

29. பட்டி போட்டு மளைத் தண்ணீர் ஒரு கும்பம் பணிப் பூ
30. மியில்ப் பட்டி போட்டுப் பணித் தண்ணீர் ஒரு கும்ப
31. ம் பிடித்தோம் மூணு கும்பத்தையும் அரக்கு முத்தி
32. ரி போட்டு யேடு படிவிச்சுக் கொண்டு வந்தேன் ராய
33. ர் அப்பாச்சிசாமி கும்பத் தண்ணீர் யெரிசுச் சொன்னா
34. ன் மளைத் தண்ணீர்படி மூணு சொனைத் தண்ணீர் ப
35. டி ரண்டு பணித் தண்ணீர் படி யொண்ணு இந்தத் த
36. ண்ணீர் ஒண்ணுக்கொண்ணு யெச்சுத்ததரு உண்டெ
37. ன்று சில்லக் கன்னமனான் சொன்னான் அப்பாச்சி
38. யெந்தத் தண்ணீர் உசத்தியென்று சில்லக்கன்ன
39. மை னாயக்கனைக் கேட்டான் மளைத் தண்ணிருக்
40. குச் சொனைத் தண்ணீர்ரெச்சு பனித் தண்ணீர் ரண்டு
41. பலம் யெச்சுப் பாருங்கோ வென்று சொன்னா செ
42. ாதினை பாத்து விடத்திலே சொண்னபடி இச்சரியாவு இ
43. ருத்துது அப்பாச்சிமாரரு மெச்சி யென்னைக்கும் பு
44. ல்லு வரிக்குடுக்க வேண்டமென்று சந்தனம் பூசிப்
45. பாக்கு வெற்றிலை பொன் ஏட்டிலே வைத்துக் குடுத்தா
46. ர்கள் அப்போது முண்டகிரிப் பொம்மன் வந்த நம்
47. ட கால் வாரி நடந்தவனை விடத்தக்க தில்லை.

## ஏடு-5 - முன்பக்கம்

1. யென்று சொன்னான் சில்லக்கன்னமனான் சொன்ன
2. வயனம் ஒரு வகைளெ நுளையுத்தகத்தில்லை யென்று செ
3. ான்னான் அப்ப ராயர் பாத்து காப்பிலிப் பொம்மனையு
4. ம் சில்லகன்மைனாயக் கனையும் ரண்டு பேரை
5. ர யும் யெட்டு நாளைக் கெடுக் கட்டிச் சில்லக்கன்ன
6.. மனாயக்கன் தோத்துப் போனால் மாடு கண்ணெல்ல
7. ாந தோற்றுப் போவது காப்பிலிப் பொம்மன் தோற்
8. றுப் போனால் இளு சங்கிலியும் பதினெட்டு விருதுந்
9. தோற்றுப் போநநென்று சொன்னார்கள் பதின்னா அ நாள்

10. க் கெடுக் கட்டி அனுப்பி விட சராகள் அபாடியே சி
11. ல்லக் கன்மைனாயக்கனு வந்து நிண்ணான் காப்பிலிப்
12. பொம்மனு மறுத்து நிண்ணான் ரண்டு பேரும் யெதிர்த்து
13. யார்ச் சண்டைக்கு நின்று அவன் அயமும் இவன் அ
14. யமும் கேட்டு விடத்தில் சில்லக்கன்மைனான் ந
15. ம்மிட அயம் பெருவிரலென்று சொன்னான் காப்
16. பிலிப் பொம்மன் அயம் ரண்டு மணிக்கட்டெண்
17. று சொன்னான் அப்போக் காப்பிலியப் பொம்மன்
18. சக்காம விசி விட்டான் சில்லக்கன்மைனான் ப
19. ாதனையில்க் குதிச்சுக் கொண்டான் அப்போ சி
20. ல்ல கன்மைனாயக்கன் கோபாலி அம்புகாலே
21. ரண்டு மணிக்கட்டுந் தெறிச்சும் மழுப்பொட்டா
22. ன் காப்பியப் பொம்மன் வாயைத் திறந்து பல்லில்
23. க் கடிக்க வந்தான் அப்போச் சில்லக்கன்மைனாய

## பின்பக்கம்

24. க்கன் வாயில்க் குத்தி வெட்டினான் வாயைக் கிளி
25. த்துக் குடலைப் பிடுங்கி மாலை போட்டு விட்டான் அப்பி
26. நம ராயர் சில்லக் கன்மைமனாயக்கனை மெச்சி வெகு
27. மதி விருதுகள் குடுத்த விபரம் பணங்கரச் சில்ல
28. க் கன்மைனாயக்கனென்று பேர் குடுத்து பொன் த
29. ளுகையில் வெற்றிலை பாக்குங் குடுத்து மிசுற தண்ட
30. சல்லியம்மன் தந்த கம்பும் வாடாத மாலையும் சாமத்
31. துரொகர் வெண்டையமும் பூச்சுக்கொக் குடையுங் கு
32. டுத்தார்கள் வாங்கி வாறபோது பட்டு புகலிப்புராயர் அத்
33. த கண்ட ராசாத ராச ராசமாத்தாண்ட சண்டப்பிசுச
34. ண்ட கரிய கெடியூழ் கெவிளிய கூழட ணெடுயெ திரு
35. சுவரு கண்டர் முஞ்சை மெட்டித் காலு இந்தி க இம்
36. வாத்திர டில்லித் துலுக்கனைக் கெட்டி செல்லு சிய
37. முலு கொன்னதிரா வில்லி இரு துபு தல்ளி அம்
38, பு கோபாலி அம்பு கையில் கசொண்டாமயாசு
39. ராதனன் அம்பு தாலி உ சில்லிங் மலாச்சிகவு உ.

♦♦♦♦

*எக்காலத்திற்கும் ஏற்ற உரை:-*

## தமிழகத்திற்கு நாவலர் தந்த பரிசு

ஒரு நாட்டின் வரலாறு என்பது அந்நாட்டில் மக்கள் வாழத் தொடங்கிய நாட்களிலிருந்து இன்றுவரை, சமுதாயம், சமயம், கலை முதலிய பல்வேறு துறைகளில் பெற்ற வளர்ச்சியை உரைப்பதாகும். இவை அனைத்திலும் அவ்வப்போது தோன்றும் கருத்துக்களின் வளர்ச்சி அனைத்தையும் எடுத்துரைப்பவை, அக்காலத்தோர் விட்டுச்சென்றுள்ள சான்றுகளே. பழைமையே பெரிதென்று போற்றுவோர்கள் உண்டு. கடந்த இருநூறு ஆண்டுகளின் நிகழ்ச்சிகளே வரலாறு என்று சாதிப்போரும் உண்டு. இரண்டு நிலைகளும் ஏற்கத்தக்கவை அல்ல. பல்லாயிரம் ஆண்டுகளாகச் சிறந்த நாட்டில் அந்தந்தக் காலத்துக்கு உரிய இடத்தை அளித்து அறிவதே சிறந்த வரலாறு.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்த வரலாற்றை எடுத்துரைக்க ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை இன்றியமையாத கல்வெட்டுகள். உலகில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு கல்வெட்டுகள் தமிழகத்தில் காணப்படுகின்றன.

இருப்பினும் நம்நாட்டில் தமிழக வரலாறு உரிய இடத்தைப் பெறவில்லை. ஆங்கிலேய கவர்னர்கள், துரைகள் இவர்களது மிகச் சிறிய செயல்கள் கூட மிகப் பெரியதாக எழுதப்பட்டு இன்றும் காணப்படுகின்றன.

இதற்கு வரலாறே காரணம். ஆங்கில ஆட்சி இருந்தவரை நமது வரலாறு மறைக்கப்பட்டு அவர்களது நடவடிக்கைகளே பாட நூல்களில் இடம் பெற்றிருந்தன. அவர்கள் சென்ற பிறகு எவ்வளவோ சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருப்பினும் பழைய நிலையில் அதிகம் மாறுதல் இல்லை. இதற்கு ஒரு காரணம் அடிப்படைச் சான்றுகளான கல்வெட்டுகளையும், கலையையும் வரலாற்றையும் இணைத்து அறியக் கூடியவரின் எண்ணிக்கை அதிகரித்தாலொழிய வரலாற்றை எழுதுவதில் தரம் உயர வழியில்லை. கலையைப் போற்றுவோர் அதிகரிக்க இடமில்லை. சுற்றுலாவுக்கு வருவோருக்கு எடுத்துரைக்கும் ஆற்றல் மிகுந்தோர் இருப்பது இல்லை. ஆதலின் இந்த அடிப்படைக் காரணத்தை அறிந்து அதை மாற்றும் பணியை மேற்கொண்ட பெருமை நமது தமிழக கல்வித்துறை அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களையே சாரும். அனைவரும் கல்வெட்டைப் படிக்கும் வகை செய்ய வேண்டும் என்பது அவர்களது அவா.

அவர்களது நேர்முக ஆர்வத்தினாலும் ஊக்கத்தினாலும் தமிழ்நாடு அரசு

தொல்பொருளாய்வுத்துறை கடந்த நான்கு ஆண்டுகளாகக் கோடையில் கல்லூரி, பள்ளி ஆசிரியர்களுக்கு கல்வெட்டுப் பயிற்சி அளித்து வருகிறது. இது ஆசிரியப் பெருமக்களிடையே பெரும் எழுச்சியையும், விழிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

மாண்புமிகு நாவலர் அவர்கள் மற்றொரு அழியாத செல்வத்தையும் தமிழகத்துக்குத் தந்துள்ளார்கள். கல்வெட்டுக் கலை அறிந்து கொள்ள ஓராண்டு படிப்பு, டிப்ளமா பெறும் வகையில் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்றை (Institute of Epigraphy) இத்துறையின் கீழ் நிறுவியுள்ளார்கள். இதன்கீழ் எட்டு எம்.ஏ. பட்டம் பெற்ற மாணவர்கள் பண்டைய வட்டெழுத்து, தமிழ் எழுத்து, வரலாறு. கலை முதலியன பயின்று வருகிறார்கள்

சில கல்லூரிகளிலாவது கல்வெட்டைச் சிறப்புப் பாடமாக வைக்க வேண்டுமென்பது நாவலர் அவர்களது விருப்பம். விரைவில் அதுவும் நிறைவேற்றபடும் என்பதில் ஐயம் இல்லை. இவை தமிழக வரலாற்றுக்கு நாவலர் அவர்கள் ஆற்றியுள்ள புகழ் மிக்க தொண்டு என்பதை வரலாறே கூறும்.

- கல்வெட்டு இதழ்-1 - 14-4-1974, பக்கம் 4-5



தீமையின் உருவகம் இரணியனைத் தூக்கி, காலில் கிடத்தி அவன் ஆகம் கிழித்தருளும் இந்நரசிம்ம உருவம் நாமக்கல்லில் உள்ளது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆண்ட ஓர் அதியமான் அரசனால் தோற்றுவிக்கப்பட்ட குடைவரைக் கோயிலில் உள்ளது. இதேபோன்று அழகர் கோயிலில் ஒரு நரசிம்மர் சிலை உள்ளது. அவ்வெழில் சிற்பத்தைக் கண்டு அதன் கலைத்திறனை போற்றி கலைஞர் அவர்கள் கூறியதுதான் மேலே அச்சிடப்பட்டுள்ளது.



ஆப்கானிஸ்தானத்தில் கிடைத்த விநாயகர்



கருவூர் வஞ்சிவேள் கல்வெட்டு - கரூர்

## Rock Paintings



1. Lascaux-France



2. S.Anatolia-Turkey

## Stone Tools



Upper Palaeolithic Tools

நிர்வாகக் காரணங்களால் கல்வெட்டு காலாண்டிதழ் தாமதமாக வெளியிடப்படுகிறது.

கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை ஆணையர் முனைவர் க.அருள்மொழி, இஆப. அவர்கள் சார்பாக திரு.கி.சு.சம்பத் கல்வெட்டாய்வாளரால் வெளியிடப்பெற்றது.

# கலைஞர் பாராட்டிய துறை

பாஞ்சாலாங்குறிச்சி கட்டபொம்மன் வாழ்ந்த கோட்டை. வெள்ளையர்களால் இடிக்கப்பட்டு உழுது ஆமணக்கு விதைகளைப்போட்டு மண்மேடிட்டு அது எங்கே இருக்கிறது என்கின்ற கேள்விக் குறியோடு இருந்த காலம் ஒன்று உண்டு. அதைத் தமிழ்நாட்டு அகழ்வாராய்ச்சித் துறையினர் 1967ஆம் ஆண்டு தோண்டிப் பார்க்க முற்பட்டு அந்தக் கோட்டையின் அடித்தளங்களை எல்லாம் இன்றைக்குக் கண்டுபிடித்திருக்கிறார்கள். கட்டபொம்மனுடைய கோட்டை அடித்தளங்கள் 2அடி உயரம். இவை பூமிக்கு வெளியே காணப்படும் வகையில் அகழ்வாராய்ச்சித் துறையினர் தங்களது பணியை மிகச் செம்மையாகச் செய்து முடித்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் **கலைஞர் மு.கருணாநிதி**

(12.05.1973 அன்று பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் கோட்டை பெருவிழாவில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி)